# நிழல் தேடும் தமிழன்!

(கவிதைகள்)

ப.வை. ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ப.வை. ஜெயபாலன்

பாலன் பதிப்பகம்
BALAN PATHIPPAGAM
CARSHALTON NEWS
47, STANLEY ROAD
CARSALTON 00661
SM 5 4LE
UNITED KINGDOM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ *நிழல் தேடும் தமிழன்* |
| ஆசிரியர் | ➢ *ப.வை. ஜெயபாலன்* |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2003 |
| பதிப்பு விவரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ iv + 108 = 112 |
| நூலின் விலை | ➢ 30.00 |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**திருமதி கனகம்மா**
**வைத்தீஸ்வரன்**

(அமுது ஊட்டிய அன்புத் தாயார்)

**திருமதி ரோகினி அம்மாள்**
**இரத்தினவேல்**

(அறிவு ஊட்டிய சிறிய தாயார்)

**இருவருக்கும்**
**இந்நூல் சமர்ப்பணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுக தரவுகள்

கவிஞர் ப.வை. ஜெயபாலனை சிறுவயது முதல் அறிந்த ஊரவன் நான். அவரது கவிதைத் தொகுப்பில் அவரை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்... பன்னாலை எமது பிறந்த ஊர். தெல்லிப்பழைப் பிரதேசத்தைச் சேர்ந்தது. அங்கே தம்பு உபாத்தியாயர் அனைவராலும் அறியப்பட்டவர். மதிக்கப்பட்டவர். அவரது பேரன் ஜெயபாலன். இவரது தந்தை வைத்தீஸ்வரன். தந்தை செல்வா தமிழரசுக் கட்சியைத் தொடங்கியபோது அதன் நிர்வாக செயலாளராக இயங்கியவர். ஜெயபாலனின் ஆறுமாத பிராயத்திலேயே அவரது தந்தை இறக்க தம்பு உபாத்தியாயரின் பேரனாக இவர் வளர்ந்தார்.

மகாஜனக் கல்லூரி கனிட்டப் பிரிவு அதிபராகக் கடமையாற்றிய தம்பு உபாத்தியாயரின் கற்பித்தலே தனி அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகடமாகப் பேசி கற்பிப்பார். சும்மா இருந்தால் சோறாமோ? வாடா சித்தா காலாட்ட என்றும் தம்பியும் தன் தொழில் நானும் என் தொழில் பொன்னனும் சின்னனும் தன் ஆரவாரம் என்றும் அவர் கூறும் சிலேடைகள் இன்றும் பழைய மாணவர்கள் நினைவில் நிற்பவை. அவரிடம் குடிகொண்ட கவியூற்று அவர் பேரன் ஜெயபாலனிலும் ஊறியது என்றே நான் கருதுகிறேன்.

ஜெயபாலன் பள்ளிக் காலத்திலேயே பேச்சாளனாகவும் நாடக நடிகனாகவும், எழுத்தாளனாகவும் பெயர் பெற்றவர். பன்னாலை கணேச சனசமூக நிலையம் சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அம்பனை கலைப் பெருமன்றம் மூலம் சமூக சேவைகளிலும் தன் ஈடுபாட்டைக் காட்டியவர். தொழில் காரணமாக கிளிநொச்சிக்குச் சென்று அங்கு வாழ்ந்த இருபது ஆண்டுகளிலும் தன் கவிதை பேச்சு ஆற்றல்களாலும் அரசியல் சமூக ஈடுபாட்டாலும் கிளிநொச்சி மாவட்டம் அடங்கலும் சமூக அந்தஸ்தைப் பெற்றவர். எட்டு ஆண்டுகளின்முன் பிரித்தானியாவுக்குப் புலம் பெயர்ந்தார். இவர் தன் கவிதைத்திறனை முதன்முதலில் லண்டன் சிறீ. முத்துமாரி அம்மன் ஆலய முத்தமிழ் விழாவில் வெளிப்படுத்தினார். அந்த விழாவில் கவியரங்கத்தில் கவிஞராக இவரை இணைக்க எனக்கு வாய்ப்பு கிடைத்ததை இன்றும் பெருமையாகக் கருதுகிறேன்.

அன்றுமுதல் பேச்சாலும் எழுத்தாலும் மேடைகளிலும் பத்திரிகைகளிலும் லண்டனில் புகழ்பெற்று விளங்குகிறார். கலாநிதி இ. நித்தியானந்தனின் சன்ரைஸ் வானொலியில் செய்தியாளராகவும் தெருவோரத் திண்ணை நிகழ்ச்சி முன்னிலையாளராகவும் பெயர் பெற்றுள்ளார். திரு. நடாமோகனின் லண்டன் தமிழ் வானொலியிலும் இணைந்து பணியாற்றி ஐரோப்பிய கனடா வானலை நேயர்கள் மத்தியில் புகழ் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் லண்டனுக்கு புலம்பெயர்ந்த மறுவருடம் நான் கொலண்ட் நாட்டுக்குச் சென்றபோது இவரது வானொலி கவிதையால் கவரப்பட்ட என் குடும்ப நண்பர் சிவநேசன் விமலாதேவி தம்பதிகள் இவர் கவிதைகளை ஒலிப்பதிவு செய்துவிட்டு மகிழ்வதையும் இவரைப்பற்றி உயர்வாகப் பேசியதையும் கேட்டேன்.

என் ஊரவர் அன்புத்தம்பி எனக்கூறி மகிழ்ந்தேன். இவரது நூலும் இவரது கவிதைகள் இவரது குரலில் இசைத்தட்டாகவும் வெளிவருவது பொருத்தமானது என்றே நினைக்கிறேன்.

ஆற்றல் மிக்க இவர் காதல் மனையாள் கமலா. ஜெயபாலன் இரணைக் குழந்தைகள் தாயகன் ஜெயனி என இனிய குடும்ப இணைப்பும் இவருக்கு உண்டு. இவரது மூத்த சகோதரர்கள் ரஞ்சன் கனடாவிலும், குணாளன் தெல்லிப்பழையிலும், தயாளன் லண்டனிலும் மகாஜனா பழைய மாணவர் சங்கம் உட்பட சமூக நிறுவனங்களில் பங்கேற்று உழைத்து வருகின்றனர். ஜெயபாலன் பிரித்தானியாவின் மகாஜனா பழைய மாணவர் சங்க உபசெயலாளராக பணியாற்றி எனக்கு பக்கபலமாக விளங்குகிறார். லண்டன் முத்துமாரி அம்பாள் கலாசார செயலாளராக முத்தமிழ் விழாவையும் போட்டி நிகழ்ச்சிகளையும் திறம்பட நடாத்தி வருகிறார். புதினம் மனம் பேசுது ஆகிய பத்திரிகைகளிலும் இவரது தொடர் ஆக்கங்கள் வெளியாகி வருகிறது. இவரது இலக்கியப் பயணம் மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

**வ. இ. இராமநாதன்**

பிரித்தானிய மகாஜன பழைய மாணவர் சங்கத் தலைவர்
பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க ஸ்தாபகர்,
அறங்காவலர்.

10.06.2004-06-21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மனம் என்ற தேன்கூட்டிற்குள் கவிதைத்தேன் தேம்ஸ் நதியின் நீரைப்போல ஓடிக்கொண்டிருக்கிறது.

மைசூரிலுள்ள பிருந்தாவன் பூங்காவில் காலை மாலை இரவு என்றில்லாமல் மலர்கள் மலர்ந்து நெஞ்சங்களை மகிழவைக்கும். அந்த மலர்களிலுள்ள தேனை வண்டினங்கள் ரீங்கார ஆரவாரத்துடன் சேர்ந்து தாங்களும் பலனடைந்து மனிதர்களையும் தேனாக்கி விடுகின்றன.

எனது அன்பு நண்பர் ப.வை. ஜெயபாலனின் உள்ளம் கவிதை உள்ளம். கவிதைச்சோலை. அங்கே கவிதைகளான மலர்களுக்கும் குறைவில்லை. அவரது கவிதைகளில் பெருக்கெடுக்கும் தேன் சுவைக்கும் அளவில்லை.

ஜெயபாலன் கவிதைகளில் தமிழ் துள்ளி விளையாடும். அவை கம்பீரத்துக்கு இலட்சணங்கள். வீரத்துக்கு காண்டீபம். உணர்ச்சிக்கு உந்துசக்தி. நாட்டுப்பற்றுக்கு நல்ல வித்து. சந்ததியின் விழிப்புணர்வுக்கு நல்ல மருந்து.

தாய்மண்ணுக்கு உரம். இரசனைக்கு இரசம். இப்படியான பெருமைகளின் இருப்பு அவர் கவிதைகள்.

இலண்டனிலுள்ள கலையரங்குகள் எல்லாம் கவிஞர். ஜெயபாலனின் கவிதைகளில் பெருமை பெற்றவைகள். கவியரங்கம் என்றால் ஜெயபாலன். ஜெயபாலன் என்றால் கவியரங்கம் என்னும் அளவுக்குப் புகழ்பூத்த கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையுடன் மேடைக்கு வரும்போது கம்பீரமான இராஜபாட் நடையுடன்தான் வருவார். அதுவே இரசிகர்களை உசார்படுத்திவிடும். பின்னர் துள்ளும் நடையில் கவிதையை அள்ளி அள்ளிப் படைக்க மண்டபத்திலுள்ளவர்களின் மனங்களுடன் கரங்களும் சேர்ந்து கொள்ளும்.

ஈழ மண்வாசனை இவர் கவிதைகளின் இதய தாகம். பாடசாலை வாழ்க்கையின் ஆரம்பத்துடன் கவிதை எழுதத் தொடங்கியவர். இவரை ஒரு பிறவிக் கவிஞர் என்றே சொல்லலாம்.

படாடோபமின்மையும் பணிவும் இவரது பெருமையின் இலட்சணங்கள். கவிதைத் தலைப்பை மட்டும் கவிஞரிடம் கொடுத்துவிட்டால் போதும். மல்லிகை முல்லை போல இரவோடு இரவாக மலர்ந்து காலையில் மாலையாக்கிவிடுவார்.

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் உட்பட எல்லா ஊடகங்களிலும் சிறந்த கவிஞராக முத்திரை பதித்த ஜெயபாலன் அவர்களின் கவிதைத் தொகுப்புக்கு சில வரிகள் எழுதுவதற்கு எனக்களிக்கப்பட்ட வாய்ப்பை பெருமையாகவே கருதுகிறேன். கௌரவமாக மதிக்கிறேன்.

தாமரையில் காலையிலும், மல்லிகையில் இரவிலும் தேன் சொரிவதைப்போல இரவு பகல் என்றில்லாமல் கவிஞர் ஜெயபாலன் கவிதைகள் கங்கை போல ஓடிக்கொண்டிருக்க வேண்டுமென்பது எனது பிரார்த்தனை.

நிழல் தேடும் மனிதன் புத்தக வடிவில் வரும் கவிஞர் ஜெயபாலனின் முதல் படைப்பு. இதைப்போல இன்னும் பல ஆக்கங்களை எதிர்பார்ப்போமாக..

அன்புடன்


**பொன். பாலசுந்தரம்**

இலண்டன் 2004

(பத்திரிகையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கவிதையின் கதை





பா. வை. ஜெயபாலன்

என் இதயத்து உணர்வுகளை சந்த ஓசை கெந்திடும் வார்த்தைகளால் கோர்த்து வடிவமைத்த வார்ப்புகள் இவை. அழகு தமிழ் குழைய உரிய கருத்தும் உள்நின்று ஒழுகும் சொற்கோர்வை கவிதைகள் என ஏற்போர்க்கு இவை கவிதைகளே! இல்லை என்போர்க்கு இவை சொல்லாரம். நிழல் தேடும் தமிழனைக் காண இந்த நூலினுள் நுழைவோருக்கு ஓரிரு வரிகளேனும் இரசிக்கும் ருசிப்பை தறித்துத் தருமாயின் எனக்குத் திருப்தி.

தமிழீழ தாயக உணர்வு பீறும் உள்ளத்தோடு புலம் பெயர்ந்து அந்நிய மண்ணில் தமிழின அடையாளங்களைத் தவிப்போடு தொலைத்துக் கொண்டிருக்கின்ற தமிழர்களில் நானும் ஒருவன். அறிவியலிலும் பொருளியலிலும் அந்நியத்திலும் முன்னிலை அடையும் வேட்கை கொண்ட மனங்களின் வேக ஓட்டத்தில் இன அடையாளங்கள் கழன்று விழுவதைப்பற்றி கவலைப்பட ஏது நேரம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் வானலைகளின் கவிதை நிகழ்வுகள் என் எழுதுகோலை கவி ஆர்வத்துக்குள் இழுத்து நுழைத்தன. தரப்படும் தலைப்புகளுக்கான வடிப்புகளை என் குரலில் வானலையில் தவழவிடும்போது இரசிக்கும் உள்ளங்களின் தட்டிக்கொடுப்புகள் இம்முயற்சியில் வேலைப்பளுக்களின் களைப்போடும் விடாது ஒட்டவைத்தன.

என் முத்தமிழ் ஆர்வத்துக்கு இத்தரையிலும் தீனி தரும் லண்டன் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய அறங்காவற்சபைத் தலைவர் திரு. நா. சிவரத்தினம் sunrise தமிழ்ஒலிபரப்பு பிரிவு அதிபர் இரா. நித்தியானந்தன் வானலைகவி வளர்ச்சிக்கு வாய்ப்பளித்த London Tamil வான்கலை நிகழ்வு first audio கலையக அதிபர் நடா. மோகன் TRT தமிழ் அலை அதிபர் குகநாதன் ஆகியோர் என் உளமார்ந்த நன்றிகளுக்கு உரித்தானவர்கள். பள்ளிப்பருவத்தே தமிழ்ச்சுவையை எனக்கு அள்ளிப்பருகிய மகாஜனக் கல்லூரி ஆசான்களையும் நெஞ்சார நன்றியுடன் நினைக்கின்றேன்.

நூலுக்குள் நுழையுங்கள் மகிழ்வோடு சுவைப்பவற்றை மற்றவர்களுடன் பகிருங்கள். குறைகளைச் சுட்டிக் காட்டுங்கள்.

நன்றி வணக்கம்.

**ப. வை. ஜெயபாலன்**

நூலாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. மாரி அன்னை! அருள் பொழிவாள் வாரி! ........ 1
2. ஈலிங்பதி ஆளும் துர்க்கை .................... 5
3. தேரில் ஏறும் மாரி அம்மன் .................... 7
4. மறக்கும் மனம் உண்டோ? .................... 9
5. கனவு மெய்ப்பட வேண்டும் .................... 12
6. விடியல் வெளிச்சம் .................... 14
7. புதுக்காற்று .................... 16
8. காற்றினில் கலந்த உறவு .................... 19
9. நிலாவரை நீரூற்று .................... 20
10. மகிழ்ச்சி தரும் மார்கழி! .................... 22
11. அந்தி வானம் .................... 24
12. தாலாட்டு .................... 26
13. அஞ்சு வாரப் பிஞ்சு .................... 29
14. அந்தநாள் ஞாபகம்! .................... 32
15. ஆனந்த நாட்கள் .................... 34
16. போதை .................... 36
17. தணியாத தாகம் .................... 38
18. வழிமேலே விழி வைத்து... .................... 40
19. இனியேனும் திருந்து தம்பி! .................... 42
20. அடுத்த சந்ததி .................... 44
21. தாய் மண்ணை மறக்கலாமா? .................... 46


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. நிழல் தேடும் தமிழன் .................... 48
23. மூத்தோரைப் போற்று .................... 51
24. இன்னுமா உறக்கம்? .................... 53
25. வருக, தமிழர் பொற்காலம் .................... 55
26. சமாதானப் படையல் இடு! .................... 57
27. அந்நியக் காற்று .................... 59
28. வெற்றி நிச்சயம்! .................... 61
29. வெற்றி கிடைக்கையிலே.... .................... 62
30. விடிவது உறுதி! .................... 64
31. வீரமறவரே! .................... 66
32. ஆடியிலே ஆனதென்ன? .................... 68
33. 83இல் இனவெறியில் .................... 70
34. சோக நினைவுகள் ஓய்வது எப்போது? .................... 73
35. கறுப்பு யூலை .................... 75
36. சொல்லிவிடத் துடிக்கிறேன்! .................... 77
37. காதல் பூக்களும் காயப்படுத்தும்! .................... 79
38. புலம்பெயர் வாழ்வில் இளைய தலைமுறை... 81
39. தமிழ் தொடர... .................... 83
40. புலரட்டும் புது நம்பிக்கை! .................... 85
41. புத்தாயிரத்தில் பூக்கட்டும் பூக்கள்! .................... 87
42. யாழ்ப்பாணம் .................... 88
43. வளமான கிளிநொச்சி மாதே! .................... 94
44. நம்பிக்கை நாற்றுக்கள் .................... 98
45. கவலையுடன் எழுதிய கடிதம்! .................... 100
46. மீண்டும் தொடரும் மிடுக்கு .................... 102
47. சித்திரையே அக்கிரமம் போக்கு! .................... 104
49. நூலகம் எரிந்தது! ஈழம் பிறந்தது! .................... 106
50. மல்லிகையாம் சஞ்சிகையின் டொமினிக் ஜீவா 107

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1




## மாரி அன்னை!
## அருள் பொழிவாள் வாரி!

அண்டம் எங்கும் புகழ் வீசும்
லண்டன் நகர் கொலு விருக்கும்
அருளில் மிகு முத்துமாரி!
அண்டியவர் துயர் களைந்து
ஆறுதலில் அவர் மகிழ
அருள் பொழிவாள் மிக்க வாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாண்டே ஆரம்பம்
கண்டு கோயில் என்ற போதும்
ஆச்சரியம் வளர்ச்சி யாவும்!
அயராத முயல் வாலே
சுயமாக இதை வாங்கும்
ஆற்றல் அவள் அருளில் மேவும்.

நாற்புறமும் நகர் கடைகள்
நடுவில் அவள் உயர் மாடி
நல் அமைதி மிகு சூழலே!
ஏற்றபல தெய்வ வாசல்
இருப்பில் அன்னை நாற்புறமும்
எழிலார்ந்த மாரி கோயிலே.

எத்தினமும் விழாக் கோலம்
இசைகள் அவள் புகழ் பாடும்
எழில் கோலம் நாள்நாள் மாறும்,
சித்திரையில் கொடியேறி
சிறப்படையும் பௌர்ணமி நாள்
தேர், தீர்த்தம் வந்து சேரும்.

தைப்பூச நாள் தொடரில்
பத்துத் தினம் முருகன் அவன்
பதி இதெனும் திருவிழாக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானை வயிற் றோன் சதுர்த்தி
ஆவணியில் அவனுக்கும்
பரவசங்கள் தரும் விழாக்கள்.

வண்டமிழாம் முக்கலையும்
வளர்க்க நிதம் ஆண் டாண்டு
வைக்கும் முத் தமிழ் விழாவும்,
வருகை தரும் அறிஞர் உரை,
வளர் சமய கருத்து நிறை
வாகும் பணி அதுவும் மேவும்.

மழலைகளும் தமிழ் பயில
மகிழ்ந்து பல கலை பயில
வாய்ப்பளிக்கும் பள்ளிச் சேவை,
மனம் ஆற வழிபாடும்
களை ஆற உணவோடும்
வரவேற்பு தணிக்கும் நோவை.

தாயகத்தின் துயர் துடைப்பில்
ஆலயமும் கரம் கொடுக்கும்
தடையின்றி எந்த நாளும்,
தரவேண்டும் நிதியம் என
விதி ஆக்கி அதை யாப்பில்
தாம் இணைத்த தன்மை பாடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட துயர் பிள்ளை வரம்
கொடுத்த திந்த அன்னை கரம்
கொடை அருளே என்னை ஆளும்
குறை போக்க அருள் பாய்ச்சி
கொடுத்த தையும் இரணை யாக்கி
குளிர்வித்தாள் அன்னை பாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈலிங்பதி ஆளும் துர்க்கை

ஈலிங்பதி கனக துர்க்கை அம்மா – தாயே
எங்களின் துயர் துடைத்து அருளும் அம்மா
வாழிடம் மீதில் எம் மொழி கலைகள் – வம்சா
வழி தொடர தாநின் அருட் கரங்கள்.
அண்ட லோகம் எங்கும் நாயகியாள் – இங்கு
லண்டன் தமிழர் நெஞ்சுக்கு ஆறுதலாய்
கொண்டு கோயில் ஈலிங்பதி உறைந்து – தேவி
கொடுக்கும் அருள் ஈழம்வரை பரந்து.

வேறான வாழ்விட சூழலிலே – எங்கள்
வேர்வழி மொழி சைவம் சீரினிலே
பேரவை யாய்கூடி இளைஞர்கள் தாம் – இங்கு
பெறத்தந்ததும் நின்தன் அருட்கரம்தான்.
ஏக்கம் துயரில் எம் தாயக மண் – வாழ
இளையவர் பசி தீர்க்கும் நின் அருட் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மீக நெறிவழி கோலோச்சி – தேவி
அறவழி சிறப்புடன் பார் ஆட்சி.

சந்நிதி வந்திடில் நிம்மதியே நின்னை
சரணடைவோர் நெஞ்சம் பரவசமே
பொன்ஒளிர் மேனி நின்எழில் கோலம் – நிதம்
பொழியும் நின் கருணை கண் வளம் யாவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரில் ஏறும் மாரி அம்மன்

தேரில் ஏறி அன்னை முத்துமாரி
திக்கு நாலும் வலம்வந்து லாவி
பாரில் உயர் இலண்டன் நகர்மேவி – டூட்டிங் (Tooting)
பதியில் இருந்து அருள் புரிவாள் வாரி

ஊரும் வண்ண எழில்கோலத் தேரில்
ஒளிரும் அவள் விழியில் அருள்ஊறும்
சீர்அழகி வதனம் அருள் கோலம் – தன்னை
சேர்ந்து அணைவோருக்கு அருள்புரியும் நாளும்

வண்ண எழில் முத்துமாரி தாயாள் – பக்தன்
வடிவத்தில் கலைஊட்டி பேசிடுவாள் வாயால்
கண்எதிரே ஓடும் இந்தத் தேரை – பாரும்
காட்சிதந்து கட்ட வைத்த அன்னை அவள் சீரை.

ஈழமணி நாட்டில் தேர் ஆக்கம் – செதுக்கி
எடுத்து இங்கு கொண்டுவர அன்னை தந்தாள் ஊக்கம்
ஆள ஈழம் அடிமை கொண்டார் மண்ணில் – இன்று
அன்னை ஆட்சி புகழ் ஒளிர்வு விண்ணில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வளர கல்விபிற சேவை – ஈழ
தாயகத்தில் துயரிடையே நின்றுதவிப் போரை
உமிழ்தருள்வாள் நிதியம் தான் தந்து
உய்யவைப்பாள் தாம்இழந்த தனிநாடு வென்று

வேலை வீடு என்ற லண்டன் வாழ்வு – என்றும்
விரக்தி இனக்கலப்பு தமிழ் அடையாளம் வீழ்வு
கோல எழில் தேவி முத்து மாரி – தேரில்
கொலு இருந்து அருள்வாய் உன் இனம் மிளிர சீரில்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கும் மனம் உண்டோ?

கந்தனது ஐந்து தேர்கள் கொண்ட எழில்மாவை
காவடியும் அடியழிப்பும் வீதியில் இரா இராவாய்
கொண்ட கண்டம் நீங்கிய தம் நேர்த்தி நிறைவேற்ற
கோல அருள் தூக்கு துலா காவடியும் போற்ற

தெல்லிப்பழை குடிசைவீடு மாடிமனை சாணம்
தெளித்த முற்றம் வீடுசுத்தம் இருபத்தைந்து நாளும்
நல்ல பல மரக்கறிகள் கடை நிறையும் சீரில்
நாடார் தாம் மீன் இறைச்சி கடைஅப்போ ஊரில்

சாமிஐயர் கொடியை ஏற்றி ஸ்தம்ப பூசை செய்வார்
தலைஆட்டி குருக்கள் அங்கு ஒழுங்கு கெடின் வைவார்
ஆமி பொலீஸ் கிடையாது சாரணரே கடமை
ஆங்கு ஆங்கு தண்ணீர்ப்பந்தல் சந்திதோறும் வழமை

மூன்றாம் வெளிதொடர் வீதி மணிகள் அணி கடைகள்
முழுமையாக தெற்கு வீதி கடலை வறுக்கும் கடைகள்
தோன்றுவார்கள் குருடர் முடவர் வறிய பிச்சைக்காரர்
தொகை தொகையாய் கண் அடிக்கும் இளவயசுக்காரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு பருத்தி புடவை வேட்டி தாவணி பாவாடை
பக்திதரும் பொட்டு குறி முகம் வழியா தாடை
எட்டுத்திக்கால் பஸ்கள் காரில் சனங்கள் வந்து குவிய
எள் எறிந்தால் எண்ணெய் தேறும் இடிபட்டு நெரிய

பச்சை சாத்தி தேரால் இறக்கி பன்னீர் மலர் தூவி
பஜனை தவில் நாதசுரம் உடுக்கு பக்தி மேவி
உச்சமாக உருவில் ஆடும் பக்தர்களும் உண்டு
உலாவில் வரும் ஐந்து தெய்வம் ஆடி ஆடிக் கொண்டு

இரவிரவாய் தேர்மறு நாள் கீரிமலை நோக்கி
எள்ளு தண்ணி இறைத்து தங்கள் பிதிர்க்கடனை ஆற்றி
வரும் செறிவாய் சனக்கூட்டம் அர்ச்சனைக்கு தட்டம்
வாங்க அம்மா கைதவறி குழந்தை அழும் கட்டம்


பனங்குட்டான் புற்பாய்கள் கடகம் கடை விரிக்கும்
பசியாற அன்னதானம் சிறாப்பர் மடம் கொடுக்கும்
சனம் நிறைய சிவன்கோயிலில் உண்டியலும் வழியும்
சனி வியாழன் நவக்கிரகம் தண்ணி வார்ப்பில் ஒளிரும்

சங்கிலி அறுப்பு சைக்கிள் களவு சாராய வியாழி பகிடி
சந்தடி இன்றி காதலர் ஓட அந்த ராவும் உதவி
இங்கிதமாக சங்கீத கானம் நாடகம் நடனம் யாவும்
இரவிரவாய் கீரிமலை கரை மேடை காணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தோடி காய்போட்டு கறிகள் சோறு சமைத்து
காகத்துக்கும் பிதிர்களுக்கும் விருந்தினர்க்கும் படைத்து
வேர்த்தோடி செல்லையர் வந்து சங்கை ஊத
விரத வீடு சாம்பிராணி புகைமயமாய் ஆக

அந்த நாளைத் தன்றன் வாழ்வில் மறக்கும் மனம் உண்டோ?
ஆனந்தம் தரும் நினைவு இதனில் வேறு உண்டோ
தந்தை தாயார் பரம்பரையாய் தவழ்ந்த சொந்தப்பூமி
தகர்ந்தயாவும் அங்கு இன்று பிணங்கள் தின்றும் ஆமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கனவு மெய்ப்பட வேண்டும்!

தினங்கள் ஒன்பது நாங்கள் பக்தி
 சிரத்தை மேவிட சேவித்தோம் தாயீர்
தனங்கொள் கல்வி நல்வீரம் மூன்று
 சக்திக்கும் எட்டிக்கும் தலைவியர் நீவிர்
மனதில் உமைத் தினந்தோறும் எண்ணும்
 மைந்தன் என்மேல் நுங்கள் அருளினை வீசும்
கனவு மெய்ப்படவேண்டும் நான்
 களிப்புற நாநிலம் சிறப்புற வேண்டும்.

ஈழநன் நாட்டுக்கு மீண்டு எங்கள்
 இயல்பு நல்வாழ்க்கையில் மகிழ்வுற வேண்டும்
பாழும் அச்சிங்களர் கொட்டம் நின்
 பார்வையால் அடக்கி அருள் தரவேண்டும்
பாழான ஊர்மனை கோயில் மீண்டும்
 பழுதின்றி ஒரு இராவில் எழிலாக வேண்டும்
ஈரேழு லோகங்கள் யாவும் ஈழம்
 எழிலான தமிழ்நாடென இசை பாடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி மலை கிளிநொச்சி மண்ணில் வற்றா
வளம் ஓங்கி நெற்கதிர்கள் பொலி தள்ளவேண்டும்
தன்னிகரில் எம் கல்வி செல்வம்
தன்னை நல்க பேரறிஞர் பல்கி வரவேண்டும்
முன்நிலையில் விஞ்ஞான நுட்பம் கணணி
முன்னேற்றம் ஈழம் தன்னில் எங்கும் வரவேண்டும்
என்னருமை தமிழ் மண்ணை என்றும்
எதிரி வெல்லா படையணியும் முன்னிலையில் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல் வெளிச்சம்

இருளவனின் போர்வைக்குள் ஏகி
இயங்கும் உடல் ஓய்வுறக்கம் ஆகி
படுத்திருக்கும் உயிரினங்கள்
பகலவனின் ஒளிக்கதிரை
பார்த்தவுடன் கண்விழித்துக் கொள்ளும்
பகல்பொழுதின் கடமைகளை எண்ணும்

பெருஞ்சுவருள் சிறையகத்து வாசி
பெருந்துயர்கொள் சிறைக்கைதிஆகி
விடுதலைநாள் வரவெண்ணி
விரல்எண்ணி வாழ்கின்றோன்
விடியலிலே தான் காணும் வெளிச்சம்
விடுதலைநாள் குதூகலத்துள் நனைக்கும்.

நாற்று நட்டு பாத்தியில் நீர்பாய்ச்சி
நாளாந்தம் களை பிடுங்கி நீக்கி
காற்று மழை வெயில் எல்லாம்
காவலரண் மீது பயிர்
காத்துநிற்கும் ஏழைக்கம காரன் கண்ணில்
ஏற்றி வைக்கும் வெளிச்சம் உற்சாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தின் கெடுபிடியாமல் வீடும்
நாற்புறமும் உறவு கொண்ட ஊரும்
பேணி நின்ற பயன்மரங்கள்
காணியெல்லாம் விட்டு வன்னி
காட்டினிலே மரத்தின் கீழ் வாழ்வோன் வெளிச்சம்
கண்டவுடன் அடைவான் பசித் தாக்கம்

ஓயாத அலை என்ற பேரில்
உற்சாகத்தோடு களம் ஆடி
பாய்புலிகள் சிங்களத்தை
பயந்தோட வைக்கும் போர்
தாயகத்து செய்திகளைக்கேட்க – வெளிச்சம்
காலைதன்னில் தரும் உற்சாகம்.

வேலையதே வாழ்வு என்று ஆகி
விதம்விதமாய் செலவுச் சிட்டை கூடி
காலம் பல உறைபனியில்
கலங்க வைக்கும் சுடு வெயிலில்
புகலிடத்தில் வதங்கும் இந்த அகதி – ஈழம்
போயடைய வரும் எப்போ வெளிச்சம்?

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்காற்று

கீரிமலை கடற்கரையில் அன்று
கிளர்ந்துவரும் புதுக்காற்றில் நின்று
ஊரி சிப்பி அலை அழகில்
ஓடி ஆடி மணல் அள்ளி
வீசி விளை யாடியநாள் எண்ணம்
விரியவரும் நினைவில் எங்கள் மண்ணும்.

மாவை நல்லூர் சந்நிதியில் தேரா?
மக்கள் அலை திரளும் ஊர் ஊராய்
காவடியும் தாவணியும்
கடலைப்பையும் திரைப்படமும்
களித்து நின்ற நாட்கள் இனி கனவா?
காற்று வந்து அவை மீட்டுத் தருமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றம் மெழுகி கோலம் போட்டுப் பொங்கி
முழ வீடும் அதற்கு முன் நாள் கழுவி
சுற்றம் எல்லாம் பரிமாறி
சூழல் எல்லாம் விழாவாகி
பட்டிப் பொங்கல் மாட்டுவண்டிச் சவாரி
பல நினைவு புதுக்காற்றில் உலாவி.

மூக்கு பேணியில் ஆட்டுப் பால் கோப்பி
முட்டிமுட்ட நுரைக்கும் கள்ளும் நாக்கில்
வேள்விக்கிடாய் புளுக்கொடியல்
வேளைக்கொரு ஓடியற்கூழ்
பழஞ்சோறு குரக்கன்மா பிட்டு
பறிபோச்சே எம் நாக்கை விட்டு

கிளிநொச்சி குளம் ஓடிக்குளித்து
கிளர்ந்துவரும் குளிர் காலைக் காற்று
களி மண்ணில் விளைந்தாகி
கனம் மணியில் தினம் ஊறி
திகழும் நெற் கதிரை தாலாட்ட
திரியும் அவை மண்ணில் கால் ஆட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னை பனை வேம்பு பலா வாழை
தெரு எதிலும் அறிந்தமுக வாடை
அன்னை என்ற மரியாதை
ஆடைவழி இல்லை உபாதை
எந்நாளும் சாரம் சேட் சைக்கிள்
என வாழ்ந்த நாள்வருமா எமக்குள்

ரி.ஆர்.ரி. ஒளி ஒலியின் ஊடே
திரிகின்ற புதுக்காற்றே நீ போய்
சீராட்டி எமை வளர்த்து
சிங்களத்தால் சீர் குலைந்து
போராடி நிற்கும் ஈழமாதா – அவள்
பொன்அடிக்கெம் வேதனை சொல் தூதாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றினில் கலந்த உறவு

வீசுபனி காவி வரும் மாசியிலே ஊரில்
வெண்பனியை வாரிவரும் சீமையிலே வானில்
ஆசை தரும் இராமலர் மேல் தாவி வரும் வாசம்
அள்ளிவரும் உறவுகளை தொலைபேசி ஊடும்.

வீச்சாக இரத்தத்தை உடல் எங்கும் பாய்ச்சி
விடாதியக்கும் இருதயத்தை தான் அரசு ஓய்ச்சி
மூச்சாக கலந்துறவாய் மானிடத்தை இயக்கும்
மொத்தத்தில் உலகியக்கம் காற்றுக்குள் அடக்கம்.

உயிர் மூச்சு காற்றினிலே கலந்து வந்த உறவு
உறவறுந்த வெள்ளிகள் வான் அந்தரத்தில் உருள்வு
கடல் மூச்சை ஆவிகளாய் மேகத்தில் காவி
கலந்து தரும் உயிர் பருக மழை நீராய்த் தூவி

உடலோடு உறவாடும் சுபாவத்தில் சுவாசம்
ஓடி வரும் தென்றல் என உடல் தழுவும் பாசம்
படுவேகப் புயலானால் கொண்டோடும் ஆவி
படைத்தவன் தன் தொழிலுக்காய் இதை விட்டான் ஏவி.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவரை நீரூற்று

நிலாவரை யாழ் நீரூற்றுக் கேணி
நெடும்பாலை மண்ணில் அதைப்பேணி
குடா நாடு முழுமைக்கும் வாய்க்கால்
கொண்டு சென்றால் பசுமை தரும் சோக்காய்...

புத்தூரால் சுண்ணாகம் போகும்
பொழுதெல்லாம் அதை நோக்கும் யாரும்
இப்பாரின் அதிசயத்தைப் பார்த்து
எப்படியாம் இது என்பார் வியர்த்து.

நெடுந்தொலைவு வானில் நிதம் ஒளிர்ந்து
நிற்கும் நிலாவரை ஆழம் நெடுத்து
இருக்கும் என்ற காரணத்தை தொடுத்து
இட்டார் பெயர் நிலாவரை என்றிதற்கு.

பருவமழை நீர் மண்ணுள் ஓடி
படிந்திருக்கும் சுண்ணக்கல் நாடி
வரும் ஊற்றாய் கோடை தோறும் பீறி
வற்றாத கிணறு என்ற பேரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிவிழுந்து வந்த தென்றாள் பாட்டி
இராவணார் உதைத்த தென்றாள் பூட்டி
இடை அறுத்த காதல் பெண்கள் விழுந்து
இறந்ததனால் ஆவி உண்டாம் நிறைந்து

பாணன் யாழ் மீட்டிப் பெற்ற பரிசு
பச்சை வற்றி போர் அழிவால் தரிசு
வீணாகும் நீர்த்தேக்கச் செறிவு
வெளிக் கொணரில் கொட்டும் வள முரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி தரும் மார்கழி!

நினைத்திட மார்பு களிப்பில் உறும்
நெஞ்சுக்கு மாரி நாள் மகிழ்ச்சி தரும்
நனைத்திடும் வெள்ளக் களிப்பில் ஊர் மார்கழி
நாட்கள் மதகுகள் உடைத்து வரும்

வெள்ளம் மழை என்றால் பள்ளிக்கூட மணி
வேளைக்கே ஒலிக்கும் பள்ளி விடும்
அள்ளித் தெளிக்கும் வெள்ளம் நடந்திட
அவ் வப்போ வீதியில் வாகனங்கள்

அடுக்கு கும்பத்தில் சாணகப் பிள்ளையார்
அன்றாடம் முற்றத்தில் வீற்றிருப்பார்
கொழுக்கட்டை மோதகம் விரத முடிவு நாள்
கொண்டாட்டம் திருவெம்பா தொடர்ந்து வரும்

வெள்ளத்தை துள்ளிப் போய் எற்றுவதும்
விளையாட்டாய் மரக்கொப்பை உலுப்பு வதும்
கள்ளமாய் வெள்ளத்தை அடுத்தவன் காணிக்குள்
கடத்த வரம்பை உடைப்பதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைமழையால் வீட்டில் ஆடுமாடு கத்தி
அலற அடுத்தவன் வேலிக்கு மேல்
குழையை ஒடிக்க கொக்கத் தடி கடகம்
கொண்டு இரவில் பதுங்குவதும்

கடும் ஈரம் விறகொன்றும் எரியாது தேடி
கடைக்கு ஓட பாண் தானும் இருக்காது
விழுகின்ற மரவள்ளிக் கிழங்கும் சம்பலும்
வீட்டுக்குள் மார்கழிப் பசி போக்கும்

புகைக்கூடு ஒழுகி நீர் அடுப்பில் விழும் பூரான்
புலி நகச் சிலந்தி தேள் பாம்பு வரும்
குவாக் குவாக் தவளைகள் இரவு இரவாய்...
கோஷ்டியாய் காதல் இசை பாடும்

வெள்ளம் வடிய வீதிக்கு மத கொன்று
வேண்டும் என்று அந்நேரம் நினைப்புவரும்
கொன்றக்கை லஞ்சத்தில் கொடுத்த ஊர் "சேமனன்"
கொல்ல வேண்டும் என்ற கோதியும் எழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தி வானம்

அந்திச் சிவப்பினை சிந்தி – அந்த
ஆகாயச் சூரியன் நாளும்
பந்தெனச் சுற்றிடும் பூமி
பாவையை கொஞ்சிடும்போதும்
எந்தெந்த வர்ணத்தில் சேலை – பட்டில்
எறிந்தவன் பரிசளித் தாலும்
குந்தி இருக்கும் இப்பூமி தலை
கோணுவாள் காதலில் வீழாள்.

நந்த வனம்தோறும் நிற்கும் சின்ன
நாலுமணிக்கன்று பூக்கும்
பந்தலில் நிற்கும் எம்முல்லை மொட்டு
பல்லை விரித்துச் சிரிக்கும்
பொந்தினை கூட்டினை தேடும் ஐந்து
புள்ளினம் நித்திரை நாடும்
அந்திச் சிவப்பினால் சூரியன் அவைக்கு
அபாயம் உணர்த்துகிறான் பாரும்.

சேர்ந்தவை உறைவிடம் ஆற; உரை
செமித்திட மதவில் நாம் சேர்ந்து உரையாட
ஊர்வன பாம்புதம் வேட்டை
உலாவர மரநாய்கள் கோழியைத் தேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரினை இருள் மூடும் வேளை போய்
பதுங்கிடும் எனும் சேதி பகர்ந்திடத்தானே
தேரினால் தான் இறங்கும் வேளை, பகலோன்
தெறிக்கிறான் தன் அந்திச் சிவப்பினை தானே!

விடியும்முன் எங்கெங்கு ஷெல்கள் வெடித்து
வீழுமோ உடலும் கூறாகுமோ என்றும்
முடிவிலா யுத்தத்தில் தோற்றும் இரவில்
மோதிட இராணுவம் பாயுமோ என்றும்
படுதுயர் நோய் பஞ்சம்பசியில் ஈழம்
பாடென்ன பட்டாலும் விடிவுதான் நாளை
விடுதலை என்ற நற்சேதி தன்னை
விடுத்திட பொற்கதிர் பதிக்கிறான் காலை.

புகலிட ஐரோப்பா நாட்டில்
போய் இருள் குளிரினில் வருந்திடும் நீவிர்
பகலது ஓய்ந்திடும் போது, போக
பார்க்காதீர் "சிவப்பொளி" பகுதியை நாடி
அகன்றிடா "எய்ட்ஸ்" வந்து தாக்கும் என்ற
அறிவுரை ஒன்றை நாம் புரிந்திடத்தானே
பகலவன் சிவப்பு அந்திநேரம் எங்கும்
படரவிட்டு அபாயத்தை உணர்த்துகிறான் பாரும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டு

இன்னிசையும் பண்ணிசையும்
இன்றொலிரும் பொப் இசையும் ஈடாமோ தாலாட்டுக்கே
இன்னமுத பாலூட்டி எடுத்து அணைக்க தான் அடங்கும்
எழும் அழுகை தாய்ப்பாட்டுக்கே
தன்உதிரம் பாலாக்கி தன்மகவை இடுப்பேற்றி
தாய் ஊட்டும் சாப்பாட்டுக்கே
என்றும் அவள் அடிதொழுது இருத்திவைத்து பார்த்தாலும்
ஈடாமோ பட்ட பாட்டுக்கே.

மடியிருத்தி தலைதடவி மழலைக்கு மகிழ்வோடு
உதிரமெனும் பாலூட்டுவாள்
குடிக்க வைத்து மடி ஆட்டி கொஞ்சிக்கொஞ்சி குஞ்சு உறக்கம்
கொள்ளவைக்க தாலாட்டுவாள்
படியேறிக் கை நீட்டி பலபேர்முன் கடன்பட்டும்
பசிபோக்க எமக் கூட்டுவாள்
அடித்தாலும் அழும்பிள்ளை அணைத்தேற்றி சீராட்டி
அன்பு தந்து கண்போல் காப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலாட்டில் ஒலி கூட்ட தவழ்ந்தோடி வரும்பாட்டு
    தாளமுடன் தாய் வாயிலே
காலாட்ட நாம்ஆட கணக்கோடு பாட்டோட
    கண்ணயர்வோம் தாய் தோளிலே
வாலாட்டி வரும் நாயும் தாய் ஊட்டும் பிசை சோற்றை
    வாய்பார்க்கும் அதைக் காட்டியே
பேய்க்காட்டி உணவூட்டி பிள்ளைக் கனி அமுதென்று
    பெய்யும் அன்புக்கு எவை ஈடேதே!

பெண் இனத்தை தாய்ஆக்கி பெருமைதரும் தமிழினமே
    பேச்சில் தாய் பின் தந்தையே
விண் இருந்து எமைக்காக்கும் தெய்வத்தை தொழும்போதும்
    வரும் அம்மை அப்பன்பதமே
கண்கண்ட தெய்வமென கணவனைத்தான் பேணும்
    காரிகையாள் தமிழச்சியே
பண்பாடு சீர் ஒழுக்கம் பாதைவழி தாய்ஊட்டும்
    பால் தாலாட்டின் ஊற்றே!

மாமன் அவன் அடித்தானோ மாதுளம்பூ கம்பாலே
    மற்றெவர்தான் அழ அடித்தார்களோ
ஏன்மகவே நீ அழுதாய் இன்னமுதே ஆராரோ
    என் அமுதே கண் உறங்காயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இசைத்த தாலாட்டு தாய் இசைத்த தமிழ்ப்பாட்டு
தமிழிலும் ஊர் மணம் வீசுமே
நான் பிரிந்த தாய் அவளும் நம் இனிய தமிழ்மண்ணும்
நம் கண்ணில் என்று படுமோ?

வழங்குதமிழ் பாஷை நடை வாய் உதிரும் தாலாட்டில்
வந்துதிரும் தடங்கல் இன்றியே
பழங்கிழவி வழி கர்ண பரம்பரையாய் செவிதூவி
பரிமாறி வந்த இசையே
முழங்கிவரும் போர் இடியில் மூழ்கி அது தடுமாறி
முனை மழுங்கி சீரழியுமோ?
புழக்கத்தில் தொடர்ந்திந்த பொக்கிஷத்தை காத்து வைக்க
போட்டு வைப்போம் புத்தகத்திலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சு வாரப் பிஞ்சு

ஐந்து வார வயது புதுத் தம்பி
அழுகின்றான் பால்ப்பசியில் வெம்பி
வந்து அம்மா அணைத்து எடுக்க
வாயாலே மார்புதேடி
முந்துகிறான் பால்குடிக்கத்தானாய்
எம்பி எம்பி குதிக்கின்றான் மானாய்

பால் குடிக்க கால்கை துள்ளி ஆடும்
பசி குறைய வாய் முறுவல் போடும்
கால் விசிறி கைவிசிறி கண்டதிசை அலைதாவி
ஆள் நீச்சல் அடிக்கின்றான் பாயில்
வாய் கூச்சல் இடும் இந்தவேளை
காய் கூய்யாம் களிப்பொளிரும் ஓசை.

அம்மாதன் மார்பிடித்துப் பாலை
அமுதமென குடிக்கின்ற வேளை
தன்னார கண் அயர்வான்
தளிர்மேனி தான் துவளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரையில் வாய் முறுவல் போடும்
சத்தம் இட்டால் உடல் திடுக்கிட்டு ஆடும்.

பல்லில்லா அம்மம்மா பாட்டி – அரைத்த
பாக்குமென்று இருப்பா வாய் ஆட்டி
தொல்லை தரும் வேளை எல்லாம்
சூப்பி அம்மா வாயில் வைக்க
மென்று மென்று பாட்டிபோல் வாய் ஆட்டி
தம்பி கண் அயர்வான் தா லாட்டில்.

நப்பி என்ற இடைக்கச்சை தன்னை
நாள் எல்லாம் கட்டி வைப்பா அன்னை
குப்பியிலே பால் குடித்து
கொஞ்சம்விளை ஆடி விட்டு
நப்பி அது நனைந்த தென்று கூற
கத்திகத்தி அழுவான் தொண்டை சோர.

வாத்துவானி குளியல் என்றால் ஆசை
போர்த்தி வெளியே தூக்க அழுகை ஓசை
ஓடிக்கலோள் அம்மா போட
ஓத்தி ஏத்தி ஈரம் வார
கம்பளிக்குள் மெழுகு சிலை போல
கண் அயர்ந்து கிடப்பான் அழகாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி கன்னம் முத்தம் இட ஆசை அவன்
தளிர் இடையில் முகம் புதைக்க ஆசை
வந்திடுமாம் பருக்கள் என்று
இந்த அம்மா தடுக்கின்றா
குசினிக்குள் அவ உள்ள வேளை – பார்த்து
கொஞ்சிடுவேன் தம்பியை நான் நாளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தநாள் ஞாபகம்!

சின்னஞ்சிறு வயது பாலர் வகுப்பு
சிந்தனையில் விளையாட்டே இருப்பு
என்னை ஆன்டி அப்பா சேர்ந்து
இழுத்துச் சென்று அழ குழற
இருத்தி விட்டார் அருவரியில் நினைப்பு
இதற்கு அப்போ கதிரேசர் பொறுப்பு

ஒருபுறத்தில் மனையியலார் கூடம்
ஊர்ந்துவரும் அப்பம் தோசை வாசம்
மறுசுவருள் நாகலிங்கம்
மாஸ்டர் நிற்பார் முதல்வகுப்பு
மாயாஜால கதைகள் சொல்வார் இனிக்க
மட்டிமடையன் கதையும் வரும் சிரிக்க.

அறைமூன்று கொண்ட தொடர் கூடம்
அடுத்ததில் ஓர் டீச்சர் வைப்பா பாடம்
பறைமேளம், பொம்மை, பூ
பல செய்ய பழக்கிடுவா
பராசக்தி டீச்சர் அவ சீரால் பேரால்
பார்வைக்கு லட்சுமிதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறையின் முடிவுச்சுவர் தொடரில்
வைரமுத்தார் எல்லை வேலி இடையில்
தகுந்த ஒரு பந்தி இறக்கி
தம்பு மாஸ்டர் பால் காய்ச்சி
தருவார்கள் இடைவேளை நேரம்
வரும் சீனி பணிஸ்சும் அந்நேரம்

முன்புறத்தில் மா பலா கொள் சோலை
மொனிற்றர் எனக்கு சறுக்கிஸ் பொறுப்பு வேலை
பின் பக்கம் நெற்போல் கிறவுண்ட்
பெரிய வகுப்பு அக்காமார்க்கு
துன்புறுத்தும் மலகூட நாற்றம்
இன்னல் இதால் அயலார்கள் சீற்றம்.

சின்னஞ் சிறுபாலர் கால நினைவு சிந்தனையே மனதுக்கு இனிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த நாட்கள்

பெற்றவளின் மடி அணைப்பில் தொற்றி நின்ற காலம்
பிஞ்சாய் நான் உணவு உறக்கம் என்றிருந்த காலம்
பற்றிநின்று தாய் கையில் பலசொல்லி அழுது
பாலகனாய் வேண்டியதைப் பெற்றுநின்ற பொழுது
உற்றதுயர் ஏதும் இல்லை பற்று மழைப் பாசம்
உற்றார் தம் அன்புறவும் முத்தமழை வீசும்.
மற்றெந்த ஆசைகளும் மலராத பால்யம்
மனநிறைவில் நாம் வாழ்ந்த ஆனந்தக்காலம்.

பள்ளியிலே நான் பயின்ற சிறுவயது நாட்கள்
பலவெற்றி கைப்பற்றி பெற்றிருந்த சீர்கள்
துள்ளல் அடி றைட் ஓ றோங் டாக்டீக்டோக் மாபிள்
கள்ளன் பொலீஸ் விளையாட்டில் களித்திருப்போம் லீவில்
பள்ளத்து வெள்ளத்தை துள்ளிப்போய் ஏற்றி
படவைக்கும் விளையாட்டு ஏழுவகைகளைச் சுற்றி
கள்ளத் தீன் ஆசையிலே கல்லெறியில் மாங்காய்
காலம் அது இள வயது ஆனந்தம் பாங்காய்.

நாடகங்கள் பேச்சுரகவி, சாரணியம் என்று
நகர்ந்திருந்த இளவயது நாட்கள் அவை அன்று
ஊடகங்கள் சிலமூலம் ஒளிவீசும் திறமை
உள்ளடையும் பாராட்டால் மனம் மகிழும் பெருமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடமுடன் மாணவர்கள் சங்கத்து தலைமை
பதவிகளில் போட்டியிட்டு வென்றிருந்த வழமை
கூடிநின்ற ஆனந்த பள்ளி நாளுக்கு ஈடு
கொண்டிடலாம் பள்ளி அன்றி வேறு எதிலே கூறு?

காளை இளம் பருவத்தே கன்னியரில் மோகம்
காதலினால் மனம் கிளர்ந்து கனவுகளும் மூளும்
பானைவிழி யாள் ஒருவன் இதயத்தை தொடுவாள்.
பலபத்தும் தினம்பாடி கடித்தூது விடுவாள்
ஆள் அவளை அடைவதிலே பல முனையில் எதிர்ப்பு
அசையாத உறுதியினால் இவையாவும் தகர்ப்பு
வாழ்(வு) இணையாய் காதலியாள் வந்தாலே போதும்
வாழ்வினிலே ஆனந்தம் வேறு உண்டோ ஏதும்?

கையில் ஒன்று இடுப்பில் ஒன்று காலைப்பற்றி ஒன்று
கணக்கின்றி ஆசையிலே பல பிள்ளை ஈன்று
பல்கிவிடும் பிரச்சனையும் தேவைகளும் வந்து
பாழாகும் உல்லாசம் குடும்பம் கண்ட அன்று
நல்கிடும் எம் உழைப்பாலே நல்லாக்கி அவரை
நாநிலத்தில் உயர்த்திவிட பரம்பரைக்கு பெருமை
கொல்லவல்ல கொல்லவல்ல வல்வினையை போக்க
நல்ல குரு நாதன் எம்மை வருத்துவதும் காக்க.

❋ ❋ ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை

மது மாது மண் என்று எழுகின்ற ஆசை
அளவுக்கு மீறிவிடில் அதில் ஏறும் போதை
எது என்று எப்போது தேவைக்கு மிஞ்சி
இருந்தாலும் அது என்றும் உயிர் கொல்லும் நஞ்சே
புது வர்ண உடைபிறவில் தினங்கொள்ளும் ஆசை
போகவே வைத்துவிடும் இருக்கின்ற காசை
இது சொல்ல கவிதை செய்தி என்றலைய வாசி
என்று வரும் என்கின்றாள் மனைவிளனை ஏசி.

உடல் நரம்பில் உற்சாகம் ஊற்றெடுக்கும் என்று
உட்கொள்ளும் மது உயிரை அணுஅணுவாய்க் கொன்று
விடும் என்று அரசாங்கம் மதுவகையில் பதித்து
விற்கின்றார் இலவசத்தில் வைத்தியமும் கொடுத்து
கெடுதி அதை விற்கின்ற அரசு செயல் எதிர்த்து
கிளம்பிவிட காந்தி மகான் இனிஇங்கு உதித்து
விடுவிக்க மதுவிலக்கு போர் நடத்தி னாலும்
விடுவாரா வெறியர்தம் உயிரே போனாலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த விலை போதை என்று கள்ளச்சாராயம்
குடித்து நஞ்சு ஊறி தினம் மாள்வார் பல்லோரும்
நிறைந்த வெறி மனக்கவலை மறக்கவைக்கும் என்று
நிதம் குடியில் மனம்ஊறில் மீட்சி பின்னர் என்று?
விரைந்து வெறி குடும்பத்து மானத்தைக் கெடுத்து
விடும் மதிப்பை ஊர் உறவை வைத்துவிடும் பிரித்து
உரை சொன்ன வள்ளுவர்க்கும் ஆண்டுதொறும் விழாக்கள்
ஊர்தோறும் பெருகிவரும் மதுசாலை உலாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தணியாத தாகம்

தணியாத தாகம் பலவேறு கொண்டு
தவிக்கின்ற எந்தன் உளமே
அணியாக காற்றில் அதை இங்கு மீட்டி
ஆறுதலைக் கொள்ளும் மனமே
பணிவான போக்கும் பகட்டில்லா கூட்டும்
பாடல் கருத் தாழமாயும்
தொனியோடு வந்து தொடர்ஆரம் தந்து
துளிர்க்க துணை நிற்க இறையே!

சிறுவயதில் தாய்மடியில் தணியாத தாகம்
சீர்இளமை வயதில் அது கன்னிமடி மோகம்
ஒரு வயதில் தாய் மார்பை உமிழ்வதிலே ஆர்வம்
ஒய்யார உடை கண்டால் கண்பாயும் மார்பம்
முறுவலுடன் கண் அசைக்க முளைக்கின்ற மோகம்
மோகினியாள் ஆள்மாற்றி ஏமாற்றத் தீரும்
வருகின்ற மனையாளை எனக்கென்று கொண்டு
வாழ்க்கையிலும் தாவும் மனம் வெள்ளை உடல் கண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணியாத காதலினை தாக உரு ஏற்றி
தந்துடலில் வைத்தவனை வணங்குகிறோம் போற்றி
தணிகை மலைநாதன் அவன் தன் தெய்வயானை
தனக்கிருக்க கொண்டானாம் வள்ளி என்ற மானை
கணிகை அவள் மாதவியை கோவலன் தான் கொண்டான்
காவியத்து நாயகனாய் பார் அவனைக் கொண்டார்
துணிவோடு இவையாவும் துணையாள்க்கு சொல்ல
சொல் நாவில் தேறாதாம் பயம் என்னைக் கொல்ல.

சாதகமும் சீதனமும் சாதி மதம் பார்த்து
சமயநெறி அக்கினிமுன் எம்மை வைத்தார் சேர்த்து
பாதகம் ஏன் நோய் நொடிகள் பலவாகும் நாமும்
பலவேரை தாகித்தால் மனை ஒன்று போதும்
ஏதெவை எம் இறையோரும் பிறபேரும் செய்தால்
எமக்கென்ன இன்பம்தான் ஒழுங்கோடு வாழ்ந்தால்
ஆதலினால் மனைவி பிள்ளை குடும்பம் என வாழ்வோம்
அடுத்தவளை தாகித்து ஒருநாளும் செல்லோம்.

⁂ ⁂ ⁂

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிமேலே விழி வைத்து...

வழிமேலே விழி வைப்பார் வருமானம் குறியாய்
வஞ்சனையும் ஏமாற்றும் வாழ்வில்தம் நெறியாய்
பழிபாவம் இறை நீதி அஞ்சாத நெஞ்சம்
பாதம்படும் துறைக்கெல்லாம் கெடுதி தரும் வஞ்சம்

ஈவு இரக்கம் பொது நீதி நன்றி எதும் இல்லார்
எதில் எங்கும் நாடு தொறும் முன்னணியில் உள்ளார்
காவி வரும் பழம் சரிதம் அவரின் பழம் கதைகள்
காலத்தால் அவை மறைய முன்னணியில் இவர்கள்

முன் ஒன்றும் முதுகின் பின் இன்னொன்றும் பேசும்
முகம் உடைய இவர் பையில்தான் சென்றடையும் காசும்
என்ன இது உலகமடா பொதுத் துறைக்குள் பலபேர்
ஏமாற்ற அரசளிக்கும் உதவிகளும் இவர்க்கே

தர்ம பொது ஸ்தாபனத்தை தாம் இயக்கி அமைத்து
தங்களது பெயரினையே அதற்கும் தாம் பொறித்து
கர்ம வீரர் என அரசின் பணம் தொகையாய் கறந்து
கடுகளவே செலவு செய்ய கௌரவங்கள் விருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தை ஏமாற்றி பணம் லட்சம் முடக்கி
தன் பெயரில் பொது சொத்தை வாங்கித்தான் மடக்கி
விட்டெறியும் சில்லறையால் சிலர் பந்தம் பிடிக்க
வீடுசேரும் கறுப்பு பணம் வட்டி தரும் சிறக்க

நின்றறுக்கும் தெய்வம் என்ற நீதி நெறி பொய்யா?
நீசருக்கே பணம் பதவி கௌரவங்கள் உய்வா?
இன்றறுப்பாய் இறைவா நீ எழு சூலம் தூக்கு
இவர் சதைகள் தூளாக்கி காக்கைக்கு இரை ஆக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இனியேனும் திருந்து தம்பி!

தம்பி வாரும் இதிலே இரும் தயவு செய்து கேளும்
தாகம் எடுக்க விடிய கோலா (Cola) குடிக்கின்றீர் நீர் பாரும்
அந்தி சாய பஃபும்(Pub) கிளப்(Club)பும் தினம் தினம் நீர் போறீர்
அகதி வாழ்வில் அந்நிய நாட்டில் சாமம் திரும்பி வாறீர்
எந்த நாளும் பூசை கோயில் ஊரில் உமது தாயார்
ஏக்கம் துயரம் இறுகும் கடனில் உம்மை நம்பி உள்ளார்
வந்த காசு பத்து லட்சம் காணி நகைகள் ஈடு
வட்டி கட்ட விறகு காவி விற்று படுறா பாடு

முகத்தைச் சுழித்து முறைக்க வேண்டாம் வயதிலே நான் மூப்பு
முகத்துக்காக அறையும் தந்தேன் வாடகையும் குறைவு
நகத்தை கடித்து தலையை கவிழ்த்து நடிக்கும் நடிப்பு போதும்
நாலுமாத வாடகைப்பாக்கி கணக்கை தந்து தீரும்
பகட்டு வாழ்வு புகைத்தல் மாது உதவிக்காசில் போதை
பகலும் இரவும் செலவு என்றால் மிகுதி ஆக்கல் ஏதை?
புகட்டும் பாடம் கேட்டு ஓம் ஓம் போடுறீர் நீர் என்றும்
பொழுது வாட நண்பர்கூட போதை படம் மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை எடுத்து தந்த இடத்தும் மானங்கெடுத்துவிட்டீர்
வேளைக்கொரு கள்ள கார்டைஇழுத்து குடித்துவிட்டீர்
ஆளைப் பிடித்து வழக்கும் ஆடி வெளியில் எடுத்து விட்டேன்
அடுத்த நாளே சீட்டு பிடித்தீர் பலரும் கட்டிக் கெட்டார்
நாளை தாறன் நாளை தாறன் என்ற சொல்லை நம்பி
நாயாய் தினமும் அலைகிறார்கள் சீட்டுகட்டிய தம்பி
ஏழைத் தாயார் வளர்த்த பாட்டை நினைவில் இருத்திப்பாரும்
இருக்கு நினைவில் என்றால் மாறி இனி திருத்தப் பாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த சந்ததி

புதியதொரு உலகத்தை செய்வம் என்ற நிகழ்வில்
பொலிவாய் வான் அலையில்வரும் ஜோதி அக்காதரவில்
வதிவிடமாம் புகலிடத்தில் இருவேறு பெற்றோர்
வாட்டமுற்ற சங்கதிகள் சொல்லித் துக்கம் உற்றார்.
எதில் எங்கும் எவருடனும் காமரசம் தீர்க்கும்
இன்நாட்டு வெள்ளைகள் போல் எம்பிள்ளை என்றால்
கதியேது தாயகத்தில் குண்டு கொலை வந்தோம்
கலாசார படுகொலைக்கா சந்ததியைத் தந்தோம்?

எங்கள் பிள்ளை இங்கிலீஸ்தான் அறிவான்மிக லேசில்
என்று நாலு பேர்க்கு சொல்ல எங்களுக்குள் ஆசை
தங்கத்தமிழ் டாடி, மம்மி, ஓல்றைட்டாய்ப் போச்சு
தமிழ்ப்பெயர்கள் டுசி, வக்கி, பர்மி என்று ஆச்சு
அங்குள்ள அம்மம்மா அறியா பேர்த்தி பாஷை
அனுப்பிவைப்பா பிரசாதங்கள் நேர்த்திவைத்து பூசை
இங்குஅதை எவர் தொடுவார் குப்பை பையில் போகும்
எங்கள்பிள்ளை விழுந்து கும்பிட ஜீன்ஸ் என்ன ஆகும்?

மக்டொனால்சும் கெண்டக்கியும் மதிப்பு உணவு ஆச்சு
மரக்கறியை வெள்ளிக்கிழமை கூட மறந்து போச்சு
சிக்கின் இன்றி பிள்ளை உண்ணான் என்ற நிலை ஆச்சு
சேலை அணியும் தாயை விசிற்றில் சேர்க்கான் பிள்ளை போச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கி நிற்கும் உடம்பில் படர்ந்து ஒட்டி நிற்கும் உடைகள்
எல்லாமே(டு) வளைவும் தெரிய எடுத்துக்காட்(டும்) நடைகள்
இலக்கியத்தில் தமிழர் இனம் கண்ட தெய்வ பெண்ணடி
இலக்குமாறி வெள்ளை கவப்பில் போகு(து) இங்கு உண்மை.

அந்த கால தாத்தாபாட்டன் குடும்பி கடுக்கண் வைத்தார்
அந்நியநாட்டில் எமது பையர் ஒற்றைக்கடுக்கண் இட்டார்
வந்தபேனை போக்க மட்டும் கட்டை மொட்டை முன்பு
வயது பையர் மாடு வயலில் உழுதமயிர் வெட்(டு) இங்கு
சந்ததிகள் 'பப்' 'கிளப்'பில் தமிழ் வளர்க்க போவார்
தட்டிக்கேட்டால் பொலிசை அல்லோ தம்பிகொண்டு வாறார்
அந்த நாட்டில் தமிழ் ஒழிப்பில் ஆமி பொலீஸ் எதிரி
அந்நிய நாட்டில் சந்ததி கெடுப்பில் பொலீசும் மிகுந்த உறுதி.

அடுத்த சந்ததி நிமிர மண்ணை மீட்கும் போரில் ஈழம்
அந்நிய நாட்டில் மொழியும் மதமும் பண்பும் இழந்த கோலம்
உடுத்த துணிக்கு அடுத்ததில்லை அடுப்பில் அங்கு பூனை
ஒவ்வொரு நாளும் அரங்கேற்றம், பாட்டி செலவுதொடும் வானை
படிப்பில் உயர்ந்து பாஷை உடுப்பு பாஷன் எதில் கலந்தும்
பாக்கிகள் தானே நாங்கள் இவர்க்கு என்ன கதை அளந்தும்
அடிப்பான் பாடும் வெள்ளை ஓர்நாள் ஓடவரும் நிலமை
அடுத்த சந்ததி ஓட விளங்கும் ஈழத்தமிழ்மண் மகிமை.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மண்ணை மறக்கலாமா?

தாய் வயிற்றில் எம் கருவின்பதிவு
தாய்மண்ணில் எம் வாழ்நாள் வதிவு
நேயமிகு தாய் முலைப்பால் உதிரம்
நிலமகளின் ஊற்றுமிழ்நீர் அமிர்தம்
தாயவளின் வாய்இசை தா லாட்டு
தான் தருமே தென்றல்சீ ராட்டு
நேயமிகு தாயும் தாய் மண்ணும்
நிகர் இவைக்கு எவை எதுதான் சொல்லும்.

கொப்பெல்லாம் காயாய் கோ லோச்சி – எம்
கொல்லையிலே புளியமர ஆட்சி
அப்பம்மா சிறு வயது நாளில் – அவ
அறிய இது வளர்ந்துள்ளதாம் வானில்
எப்பொழுதோ முப்பாட்டன் நாட்ட
இன்றும் அது பயன் பொருள்நாம் ஈட்ட
அப்படியெம் வழிவழியாம் காணி
ஆளுகிறான் சிங்களத்து ஆமி.

படலை முதல் வாசல் இரு பக்கம்
படர்ந் தழகு குறோட்டன்கள் நிற்கும்
கடவையிலே மா பலா நல் வாழை
காணி எல்லை பனை தென்னை சோலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது வல வீடுகள் எம் சுற்றம்
எதுசெயினும் தான் சொல்லார் குற்றம்
இடம்பெயர்ந்து நாடுமனை விட்டோம்
எனினும் மண்ணை மறந்தால் நாம் கெட்டோம்.

அருமைமிகு எம்மண்ணின் பெருமை
அறிய வைக்கும் வெளிநாட்டு சிறுமை
வறுமையிலும் ஓய்வுறக்கம் அங்கு
வருத்துகிறார் "பாக்கிகள்" நாம் இங்கு
சிறுமை செய்யும் சிங்களவர் கொட்டம்
சோர்ந் தடக்க நாம் தவறி விட்டோம்
வரும் பொருளும் பெருவாழ்வும் என்றே
வந்தடைந்தோம் நிம்மதிதான் எங்கே?

தாய்மண்ணை மீட்டெடுக்கும் போரில்
சமர்புரிய நின்றிலம் நாம் நேரில்
ஓய்வுறக்கம் இன்றிப் போ ராட்டம்
உதவு கரம் இங்கிருந்து நீட்டும்
பாய்புலிகள் ஈழ மண்ணை மீட்க
பதியும் எம்கால் தொடர்ந்து அதனைக் காக்க
தாய் மொழியும் தாய்மண்ணும் கண்கள்
தாம் மறந்தோர்க்(கு) உள்ள இரு புண்கள்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல் தேடும் தமிழன்

ஆதரவு பறவைகட்கு கூடு
அதில் உறங்கும் ஆணோடு பேடு
சீதளத்தின் காலநிலை மாற எங்கும்
சென்றடையும் தம் உணவு தேட
கூதலுக்கு தன்னைக் காக்க பாம்பு
கொண்டுள்ளது புற்று என்ற கூம்பு
ஆல மரமாம் தமிழன் ஊரில் – இன்று
அலைகின்றான் நிழல்தேடி பாரில்

பசுஞ்சோலை வளவு வீடு காணி
படலையில் சங்கட்டக்கூரை பேணி
தெருவாலே போவோர் களை தாகம்
தீர்ப்பதிலே கொண்டிருந்தோம் மோகம்
வருவோரை உபசரிக்கும் பண்பு
வைத்திருந்தான் தமிழன்தான் கொண்டு
பரிதவித்தான் இனக்கொடுமை யாலே
இன்று பார் எல்லாம் நிழல்தேடி தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குபீர்" விமானம் குண்டுகக்க அஞ்சி
கொண்டலைவாள் தாய் மகவைக் கொஞ்சி
திடீர் என்று வாந்திபேதி பரவும் – மருந்து
தேட முன்னர் பிள்ளை உயிர் பிரியும்
கொடிய விஷ பாம்பு தேன் கொடுக்கன் – நிழலாய்
கொண்டுள்ள வன்னியியோ கிடுக்கண்
ஓடிந்தமனம் உளைச்சல் தமிழ்த் தாயாள் எங்கும்
ஓதுங்க நிழல் இன்றி மனம் நோவாள்.


பாவை அவள் உயர்கல்விப் பருவம் – அண்ணன்
படி படி என்(று) எழுதிடுவான் கடிதம்
தாய் மகனை பள்ளிக்கு கொண்டு விடுவாள்
தடுப்பு முகாம் தாண்டும்வரை வந்து
பாயும் ஒரு குண்டு இடைநேரம் – உடனே
பள்ளிவிடும் சுற்றி வளைப்பாகும்.
பேய் ஆட்சி ஆமி கையில் பேதை – பிதுங்கி
பெறுவாள் பின்னர் நிர்வாணச் சாலை.

பாலைவனம் ஆதி யாழ்ப் பாணம் – பாணன்
பரிசுபெற்ற தமிழன் நிழல் ஸ்தானம்
சோலைவனம் கடும் உழைப்பி னாலே – துலா
தோண்டி அள்ளும் ஆழ நீரைத் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல எழில் பண்பு நிழற்பூமி எங்கும்
கொண்ட சொந்தம் பள்ளிகோயில் சாமி
ஆளவந்தான் சிங்களத்து ஆமி – சுடலை
ஆக்குகிறான் யாழை அந்த காமி.

விடிவென்ற நிழல் தேடும் நெஞ்சே தமிழர்
வென்றிடுவார் தமிழ் ஈழம் அஞ்சேல்
கொடும் அரக்கன் சிங்களவன் ஆட்சி
குலையும்எரி மலை வெடித்து பீச்சி
படுதுன்பம் மொழிகலைகள் அழிவு – நீங்கி
பைந்தமிழர் ஈழம் பெறும் விடிவு
தொடுக்கும் எங்கள் கவி இறையைச் சேர – அவன்
தோகை விரிப்பான் நிழல் சூழ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோரை போற்று

கொத்தி உண்ணும் பழம் சமிக்க எச்சமுடன் விதையை
குருவியினம் பறந்தலைந்து கழிக்க ஒளிவெட்டை,
சத்தாக்கி முளைவிட்டு வேரூண்டி மண்ணில்
தலை நிமிர்த்தி இலைபரப்பி பசுமை தரும் கண்ணில்
எத்திக்கும் கிளைஅகல எழும்பும் பெரு ஆலாய்
இடைக் கிளைகள் விழுதுவிடும் பலமாக்க ஜோராய்
முத்தம் இடும் மண்மாதை விழுதுகள்தாம் நீண்டு
முறுகி விழுது கிறுகும்மண்ணில் தாய்க்கு உறுதிபூண்டு.

அம்பனை எம் சந்தியிலே நின்றமரம் ஆலில்
ஆயிரமாய் குருவி இனம் மகிழும் காலைப் போதில்
தங்கிவிடும் கூடமைத்து காகம் அணில் யாவும்
தாம்நிறைவாய் பழம் உண்டு கிளைகள் அவை தாவும்
கங்குலிலே வயல்வேலை என்று செல்லும் உழவர்
கடன்கழிக்க பல்துலக்க ஆறதரும் நிழலும்
எங்களது அம்மப்பா தாத்தா காலம் முதலாய்
இருக்கிறதாம் இதே ஆலும் பருமனுடன் இதிலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவழி பேரன் தம்பு சின்னக்குட்டி முதலி
அப்பாவழி செல்லப்பா பிள்ளை முத்துக்குமார் முதலி
இம்மாவழி சந்ததிகள் ஆல்விழுது வேர்கள்
எல்லோருமாம் ஒரே கூரை வாழ்வு கண்ட குடிகள்
சும்மா ஒரு தலையிடிக்கும் துடிக்கும் சொந்த ரத்தம்
சொந்தம் என்ற உறவுக்கெல்லாம் பொதுஉடைமை சொத்தும்.
தம் ஆள்ஆக உடமை மைத்துனர்கள் முறையில் தாலிகட்டி
சந்ததிகள் தொடர்வு நிதம் ஒரே உறவுப் பட்டி.

மண்டாக் கயிற்றை மச்சான் கையில் கொடுக்கும் நம்பிக் கைகள்
மரபில் மூத்த உறவின் சொல்லை மதிக்கும் பாசக் கைகள்
திண்டாடிடும் உறவைக் காக்க தேடி ஓடும் சொந்தம்
தேவை அறிந்து தாமாய் விரைந்து உதவும் பாச பந்தம்
விண்ணில் வளரும் ஆலைக் காக்கும் வேர்கள் விழுது மண்ணில்
வீட்டில் மூத்த உறவின் சொல்லை மதித்துவாழும் பண்பில்
மண்ணில் வாழ்வு உயரும் மாற்றான் எதிரி மனம் அஞ்சும்
மதித்து மூத்தோர் வாழிதொடர மலரும் வாழ்வு என்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமா உறக்கம்?

இன்னுமா உறக்கம் நாளை வந்து உன்னை
எழுப்புவேன் எனச்சொன்ன பெண்ணை
தன்னரும் திருவெம் பாவிலே கருவாய்
தந்தது மாணிக்கர் அருள்வாய்
பெண்ணவர் கூடி பொதுக் குளம் நாடி
பிறக்கும் அக்காலை நீராடி
பொன் எழில் மகிழ்வு பூண்ட நாள் ஈண்டு
புலருமா? இனி எந்த ஆண்டு!

வேட்டொலிச்சத்தம் விடிகையில் நித்தம்
வெளிக்கிடும் ஷெல் ஒலி உடன் யுத்தம்
வீட்டெதிர் வந்து விட்டது என்று
விழிகளில் பயம் கௌவிக் கொண்டு
நாட்களைக் கடத்தும் நம்மவர் தேசம்
நலிவு நோய் பயம் பசி வாசம்
ஈட்டிட வெற்றிக்கு இணைந்து கைப் பற்றாய்?
இன்னுமா உறக்கத்தில் உற்றாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவியர் கொடுமை பாவையர் சிதைவு
பாழ் நிலம் தொழில் வளம் நலிவு
நேய நம் வீடு நிலம் ஊர் சுற்றம்
நீங்கி நாம் இக்கதி உற்றோம்
தாயனை பள்ளித் தலங்களைக் கிள்ளி
தகர்த்தனர் குண்டுகள் தள்ளி
பேயரா நாங்கள் பின்னும் ஏன் உறக்கம்?
பெரும்படை வரின் அணி சிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக, தமிழர் பொற்காலம்!

பொற்காலம் நற்காலம் தமிழர் நம் தாகம்
புத்தா யிரத்திலது கனிந்து நன வாகும்
முற்காலம் தமிழோச்சி இருந்த மூவேந்தர்
முற்சங்க தமிழாழர் இனியவர் வேந்தர்
தற்காலம் எழிலோங்க அமையும் தமிழரசு
தரணி எங்கும் புகழோச்ச ஒலிவார்கள் முரசு
திக்கெல்லாம் தமிழீழ புகழ் எங்கும் பாயும்
திசைஎங்கும் தமிழர் பகை தானாக மாயும்

கடல் வற்றும் பாக்குநீர் நிணையற்று போகும்
கடலாழம் சமமாகி ஈழ ஊர் ஆகும்
அடல் ஏறு புலி வீரர் தமிழ் நாடு ஈழம்
அடங்களினும் காவல் தமிழ் பயமின்றி வாழும்
உடல்வேறு ஆயிருந்த ஈழம் தமிழ் நாடு
ஒன்றாகி வளம் திறனில் வீறுநடை போடும்
திடவான கடல் நிலத்தில் வெளி நாட்டுத்தமிழர்
திரள்வர் பெரும் குடியேற்றம் இனி எவ்வாறு அமிழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுநிலமாய் ஆனஎங்கள் தமிழ் அன்னை நாட்டில்
நீதிமிகும் பசி பிணி என்று எதுயு மிரா வீட்டில்
தொடுவானம் கடலோடு உறவாடும் நெய்தல்
தொடராக கடற் செல்வம் சொரிய வளம் எய்தும்
மடிமீது நெல் வளர நெடுநீன மருதம்
மாளாதே பொலி தமிழர் பசி தீர்க்கும் அமிர்தம்
பிடியாழின் இசையாலே பரிசாக பாணம்
பெற்ற யாழ்ப் பாவை தமிழ் உழைப்பாற்றல் காணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் படையல் இடு!

புறப்படு தோழா புறப்படு!
போரிடும் அணியில் ஒருப்படு!
மறப்படை அணியில் உன்வீரம் – பிற
மாற்றான் படையணி உடன் சாயும்.

துப்பாக்கி தருகின்ற துணிவொன்றில் எதிரி
தொடர்கிறான் பலி எங்கள் மண் தன்னில்
அப்பாவி உடல் மல புதை குழிக்குள் நீ
அடைய முன் எழ அந்தக் கதி உனக்கு.

பொங்கிடும் நின் தோள் தினவெடுக்க
போரிட எழு நீ தமிழ் சிறக்க
சிங்களப்படை அணி தலை சாய
செங்களம் ஓயும் தமிழ் அரசாள.

எதிரிகள் படை அணி மண்டியிட
எத்தர்கள் ஓடுவர் பிடரி அற
உதிரிகள் உயிர்க்கு அஞ்சி ஒதுங்கிட
உதித்திடும் சமாதானம் சிறப்புற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் ஆண் பிள்ளை ஊர் சுற்றம் - எனும்
பேரணி எழின் போர் கதை முற்றும்
எண்சாண் முழத்தில் ஒவ்வொரு வெடி - எழ
எதிரி பின் தான் தப்ப என்ன வழி?

படையில் எழு போர் பறையில் எழு
படையலாய்ப் புய வீர படையல் இடு
விடியல் இது போர் முடிவும் இது - எதிரி
வேர் அற சமாதானம் விடியும் எழு.

படையல் இடு வீரப்படையல் இடு தமிழ்ப்
படைக்கு நின் உயிர்க் கொடைப் படையல் இடு
அடைவம் எழு நாம் அடைவம் எழு
ஆண்ட நம் மண் மீண்டும் அடைவம் எழு.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நியக் காற்று

வன்னியனாம் பண்டார மன்னன்
வடக்கில் அன்று சங்கிலிய ராசன்
அந்நியரின் காலடி எம்
அன்னைபூமி தேசத்தில்
வந்து இறங்க முன் செய்தார் ஆட்சி
வனம் பொலிந்த தமிழர் அரசாட்சி

தென்னை பனை நெல்வளங்கள் சேர்வு
திக்கெல்லாம் கடல்வளங்கொள் தீவு
என்னவளம் இல்லை மன்னன்
எல்லாளன் தவ அருளால்
முன்னர் அங்கு மும்மாரி பொழிவு
மன்னர் அறம் சமய மயம் செறிவு

காற்றில் அன்று அன்னியரின் வாசம்
கலந்த தனால் சீர் அழிந்த ஈழம்
மாற்றாரின் மிரட்டலுக்கும்
மண்டியிடா அரசர்களை
போற்றுகுது இன்று வரை சரிதம்
புறங்காட்டான் தமிழன் இது விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மதமும் நல் மதம்தான் தெளிவு
எதைக் கொடுத்தும் மதம் மாற்றில் இழிவு
தம்மதத்தை அந்நியர் எம்
தாய் நிலத்தில் விளைத்திட முன்
மும்மரமாம் சைவர் தலம் சிதைத்தார்
மூவேந்தர் ஆக்கியவை அழித்தார்

அந்நியர் எம் தாய் மண்ணைப் பிடித்தார்
அயல்கள் ஒன்றாய் இணைத்து இலங்கை வடித்தார்
இன்றுவரை மொழிகள் மதம்
தொன்று தொட்டு போரில் நிதம்
வென்று வரும் தேசம் கொள்ளும் விடிவு
வேளைவர பலகோடி அழிவு

போரிட்டு ஊர்பிடித்தோர் நாட்டில்
போரதினால் இடம் பெயர்ந்தோம் ஈற்றில்
சீர்கெட்டு மொழிவிட்டு
சிறுமையுற்று பாக்கி என்று
பேர் பெற்று அன்னியர் நாம் ஆனோம்
வேரடி எம் ஈழம் எப்போ போவோம்

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி நிச்சயம்!

எல்லாளன் சங்கிலியன் இராவணணார் ஆண்ட
ஈழம் எங்கள் தேசம் இன்று போரில்பலர் மாண்டார்
புல்லாளர்கையால் நம் நாட்டை மீட்க
போராடு கின்றார் எம் வயதொத்தோர் காக்க
வல்லாளர் புலிகளின் போர் திறன் உலக வானில்
வாயடைத்தார் வல்லரசும் திறன் புகழைக் காணீர்
நல்லாட்சி நம் ஆட்சி நாளைத் தமிழ் ஆட்சி
நாம் ஈழம் வென்று செய்வோம் தனித் தமிழில் ஆட்சி

புலம் பெயர்ந்த நாடு இது யார் எவரோ சொத்து
புகலிடத்தில் உடல் நிதமும் உளத்தில் ஈழப் பித்து
குலம் குலமாய் பரம்பரையாய் காத்த பண்பு பாஷை
கொளலாமோ சந்தையிலே விட்டெறிந்தால் காசை
இல்லை இங்கே நின்மதி நாம் கறுப்பர் அயல் வெறுப்பு
எங்கென்றும் நாம் தமிழர் அது பேணல் பொறுப்பு
நலம் கூடும் நாளை தமிழ் ஈழம் எம்கை வீழும்
நாம் திரும்ப வளம் அரும்ப தமிழ் ஈழம் வாழும்.

※ ※ ※

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி கிடைக்கையிலே...

வெற்றி கிடைக்கையில் எட்டிக்கிடப்பதா?
வேறுபட்டெம்மினம் மாறுவதா?
சுற்றிப்பகைவரின் கொட்டம் அடக்கையில்
எட்டப்பராய் எம்மோர் மாறுவதா?

போரின் கொடுமையில் சோரும் சனவெள்ளம்
சேரும் வெளி நாட்டில் நாளும் அகதியே
கூறும் பெருமையில் போரில் இளஞ்சிறார்
வீரம் பெருமை எம் வாயில் எழுத்தில்தான்

எட்டி நின்று பெருமை பேசும்
வெட்டிப் பேச்சு வீரரா?
பட்டி தொட்டி எங்கிருந்தும்
எட்டி வந்து சேர்வீர் நீர்

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று முற்றும் உள்ள சுற்றம்
குற்றமற்ற தென்று கை
பற்றி நின்று பகையை நோக்கில்
வெற்றி கிட்டும் நிச்சயம்

நாதியற்று எதிரியோடு
நாம் இணைந்த வெற்றி ஏன்?
மோதி நின்றார் சோழர் சேரர்
ஈழம் மாற்றார் கொண்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவது உறுதி!

கொடிய போர் தொடரும் எம் தாயக மண்
குடி கொண்ட பசிப் பிணி ஆறாத புண்
விடியலின் உறுதியில் புலிகளின் பண்
வீரமும் தியாகமும் அவர்களின் கண்


எம் இன மன்னவர் வழிப்பூமி
இறை நெறி மனுநீதி அதில் மீதி
அன்னியர் படை வந்து வளம் காவி
அகன்ற பின் சிங்களவன் கையில் சாவி

யாழ் வன்னி கண்டி எம் இராட்சியமே
யாவையும் இலங்கையாய் சூழ்ச்சியிலே
வாழிடம் பறித்திட்ட குடியேற்றம்
வகுத்தனர் தனி மொழி சட்ட ஆக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்களம் கண்டது தமிழர் படை
சிங்களம் சிதறிட வீறு நடை
தங்கள் தம் உயிர் ஈந்து எதிரிபடை
தகர்ப்பது புலிகளின் யுக்தி முறை

துவண்டமும் சிங்களர் சுருதியிலே
தோல்வியே அவர் அணி நியதிஇதே
வெருண்டெழும் புலிகள் குருதியிலே
வெற்றியும் விடியலும் உறுதியிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமறவரே!

இன்றுங்கள் நினைவாக எழுச்சி அஞ்சல் விழாக்கோலம்
எங்கெங்கும் மாவீரரே!
இன்தமிழ் நல் வாழ்வுக்காய் தந்துயிரை நிலையானீர்
எம்மறவீர் மாவீரரே!
சன் ரைஸ் தன் நிகழ்வாலே தரும் நேயர் கவியாலே

தற்கொடைக்கு உம் புகழ்பாடுமே
தமிழ் என்னுள் தளராது தான்தொடர்ந்து வாய்வந்தும்
தற்கொடையில் புகழ் பாடுமே

ஐம்புலனும் உலகத்து ஆனந்தம் குஷியோடு
அனுபவிக்கும் இளமைக் காலம்
தெம்புமிகு உடலும்தான் தீராத பல தாகம்
தேடி எங்கும் துய்க்கும் பருவம்
ரம்மியாய் முடியழகில் லாவண்ய உடையழகில்
லயிக்கும் இள வயதுக்கோலம்
எம்மினத்துக் காய் துறந்து எதிரிமுன்பு களமாடி
இறந்த எம் மாவீரரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரேழு லோகத்தும் இதிகாச புராணத்தும்
இல்லை உயிர்கொடைக்கு நிகரே!
கடல் என்ன வனம் என்ன காற்றில்வரும் ஷெல் என்ன
கனல் கக்கும் நும் வீரமே
கரும்புலியாய் போர் முனையில் கணம் ஒன்றில் கனலாகி
கருகிடுவீர் பிடி சாம்பலே
உடலத்தை உயிரோடு ஒப்புவித்து விடுதலைக்குள்
ஒளியான நும் தியாகமே

ஓயாது புகழ் பாடி உலகனைத்தும் வியர்ப்பாகி
உயர புகழ் உளி வீசுதே!
பலம் என்றதிடம் வீரம் படையணியில் புயல் வேகம்
பயம் அறியா ஈழத் தாகம்
பற்றி உளம் ஏற்றி நிற்கும் பார் வியர்க்கும் நும் தீரம்
படைக்கும் ஒரு ஈழநாடும்
நிலம் ஒன்று தமிழ்க் கென்று நிமிர்ந்தெழும்பி
கொடி பறக்க நிற்கும் அந்த வெற்றிநாளில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடியிலே ஆனதென்ன?

ஆடியில் ஆனவை தேடித்தரும் பல
ஆறுதல் துயரங்கள் கோடி கோடி
வாடும் துயரிட யாழ்ப்பாணப் பனங்கள்ளை
வாயூற நினைப்பம். நாம் பாடிப் பாடி.

கொழுக்கட்டை மோதகம் கூழ் என தாயகம்
கொண்டாடப் பிறந்திடும் ஆடி நல்லாய்
அழகை துயரினை கலவர நினைவினால்
ஆடி தரும் இது வாடிக்கைதான்.

மாவை முருகனின் கோவில் கொடியேறி
மகிழ்வினை முன்பெல்லாம் ஆடி தரும்
பிதாவை இழந்தவர் ஆடி அமாவாசைக்கு
பிதிர்க்கடன் தரகீரி மலை நிறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்கினிய மணாளனை அடைந்திட
மங்கையர் நோன்பிடும் ஆடிச் செவ்வாய்
கனத்த துயர் தரும் நகைக்கடைக்காரர்க்கு
கல்யாண நாள் இன்றி ஆடி நல்லாய்.

ஆடி உழவினைத் தேடி உழு என்று
அன்றய மூதுரை அறிவுறுத்தும்
வாடும் பயிர்க் கின்று துளி நீரும் இல்லாமல்
வற்றிடும் ஊற்றால் ஊர் துயரில் உறும்.

தவணைப்பரீட்சைக்கு படிஎன்று பணிப்புரை
தாயார் தருவதும் ஆடியில்தான் பனை கொடியேறி
புவனம் புகழ் கள்ளை
பொழியும் கணக்கின்றி ஆடியில்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 83 இல் இனவெறியில்

ஈரவிழிகளின் சோக நினைவுகள்
83 க்கு இழுத்துச் செல்ல
பாரம் மனதினில் ஊறி கவலையின்
பழுவில் இதயமும் கனத்திருக்க
கோரக் கொலைகளின் ஈனத்தனம் நெஞ்சில்
கொதிப்பை உமிழ்ந்து அழுத்தி நிற்க
வீரத்தமிழ் மற தீரர் தமிழ் ஈழம்
வென்றிடும் நாள் ஏங்கி நெஞ்சு விம்மும்

அன்னியர் வந்து புகு முன் தமிழ்மன்னர்
ஆண்டநிலம் வம்சம் நீண்டநிலம்
வன்னியும் யாழ்மண்ணும் வளர்மலை கண்டியும்
வழிவழி தமிழர்மண்சரிதம் சொல்லும்
தன்வழி மண்ணதில் தமிழர் நாம் தமிழராய்
தலை நிமிர்ந்திருந்திட வழியிலையேல்
என்னென்ன இருந்தென்ன எம்மண்ணில் இல்லையேல்
இங்கென்ன எங்கும் நாம் அன்னியரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையின் மண்ணில் நாம் வேண்டாத விருந்தாளி
விரட்டுகிறார் வாழ்கிறோம் வழக்காடி
கள்ளிடும் வெயில் சொரிகின்ற பனிமழை
சூழல்நாம் வேலையே வாழ்வானோம்
உள்ளம் கவலையில் உழலும் இவ்வாழ்வைநாம்
ஓடிவந்தேற்றிட காரணமே
கள்ளள வேணும் அச் சிங்களர் நெஞ்சினில்
ஈரம் இன்றிச் செய்தவன் செயலே

வெலிக்கடை சிறையினில் வெறிக் கொலை கைதிகள்
வெளிவர கொலை செய்ய கார்ணம் யார்
பொறியிடை எலிஎன பூட்டிய சிறைக்குள்ளே
பொல் இரும் படிகளால் வீழ்ந்திறந்தார்
அறிவுல கேற்குமோ அடாச்செயல் படுகொலை
ஐம்பத்தி நால்வர்தாம் மாண்டனரே
மறத்தமி ழன் குட்டிமணி அவன்கண் தோண்டி
மகிழ்ந்தோர்க்கு சரிதத்தின் மன்னிப்புண்டோ?

தானும் மனைவியும் வைத்திய கலாநிதி
தன் நலம் குடும்பமாய் வாழ்ந்திடாமல்
ஈனர் செயலினால் வாழ்விடம் இன்றியே
எழுபத்தி ஏழினில் வடக்கு வந்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டை அழித்து நல் கழனியாய் ஆக்கி இல்
கட்டிக் கொடுத்த காத்து நின்றோன்
காந்தீயச் செயலாளர் இராஜசுந்தரம்தலை
காயச் சா நெஞ்சத்தால் நீங்கிடுமோ!
ஈர விழிகளின் சோக நினைவுகள்
எழுப்பிடும் வீரப்பெரும் அலைகள்
சேரும் தமிழ்ஈழ நாடென்ற செய்தியை
செப்பும் தமிழர்கை முரசொலிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக நினைவுகள் ஓய்வது எப்போது?

சோகத்தின் நினைவெப்போ ஓயும் – ஈழ
மீள் வெப்போ அப்போதே ஆகும் – தமிழர்
தேசத்தில் இரத்த ஆறு ஓயும் ஈழ
திசை எங்கும் பகை மாயும் போது.

எம்முன்னோர் வழிவழி எம் மண்ணில் – மாற்றான்
என்கின்றான் எவனோ இன் றென்னை
முன் ஆண்ட பரம்பரையாம் எம்மேல் – என்றும்
முறைகேடு வன்முறைகள் பன்மேல்.

அரச மரக் கொப்போடு வந்து – வேரில்
அடிபரப்பி இனம் பெருக்கிக் கொண்டு – நாடு
ஒரு நிலமாய் அந்நியனால் ஆக – எம்மை
ஒடுக்கி விட்டான் முழு நிலம் தான் ஆள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவழியில் காலிமுகத் திடலில் – தலைவர்
58 இல் இரத்த மழை நனைவில்
பிற கென்றும் கலவரங்கள் நாளும் – சிறைகள்
பெண்கள் கற்பு சொத்து உயிர் நாசம்

மறவழியில் தமிழ் இளைஞர் நாட்டம் – கொள்ள
வைத்த தந்த சிறைக் கொலைஞர் ஆட்டம்
புறப்பட்டார் தமிழ்ப்புலிகள் சமரில் – சிங்களம்
பொசுங்குது பார் அழிவுபய கிலியில்

கடல்கள் தரை ஆகாயம் எங்கும் – புலிகள்
களம் சமர்கள் நிதம் வெற்றி என்றும்
படும் துன்பம் அகதி நிலை சோகம் – ஓயும்
பார் ஒரு நாள் தமிழ் ஈழம் மீளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு யூலை


செந்தமிழர் வாழிடத்தை சிங்களவர் வெங்கொடுமை
செந்தீயில் இட்ட காலம்
திசை எங்கும் கோயில் கடை தீ நாக்கில் கரியாகி
சேதாரம் உற்ற கோலம்
நம் தமிழர் உயிர் குடித்து நாயாய் ஓர் பேய்க்கூட்டம்
நாடெங்கும் அடித்த கொட்டம்
நங்கையர்கள் கற்பழிப்பு நகைகள் பணம் பொருள் பறிப்பு
நம் இனமே நாராய் உரிப்பு

போர் அழிவின் சீரழிவை புரிந்து அன்று அசோகமன்னன்
புத்தர் வழி பித்தன் ஆனான்
கூர் அரிவாள் கொண்டு தமிழ் குட்டிமணி கண்தோண்டும்
கொடுமையின் பேர் பௌத்தம் தானாம்
பார் அதிரும் பெரும் கொடுமை பலியானார் சிறையகத்து
பைந் தமிழர் ஐம் பத்து மூவர்
சீரிய நற் காந்தீயம் செம்மல் டாக்டர் ராஜசுந்தரம்
சிந்தியதும் தியாக ரத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு துயர் யூலை நீ கனத்துயர் தந்தாலும்
கண்களையும் திறக்க வைத்தாய்
காந்தீய சாத்வீகம் கைமுடக்கம் இனயுத்த
களத்தில் மறப்போரின் தொடக்கம்
ஒறுத்து தமிழின உரிமை உதாசினம் செய்தவர்கள்
உலகெலாம் பிச்சை ஏந்தி
உதவிக்கரம் நீட்டி நின்று உயிர்காக்க தலை தெறிக்க
ஓடுகின்ற காட்சி மாற்றம்

வெளிப்பான யூலையாய் கறுப்பான யூலை நீ
வருவாய் நீ விடியும் ஈழம்
வெங்கொடுமை உயிர்ப்பலியில்
விதைகள் சிந்தும் இரத்தத்தில்
விளைந்து எழும் தமிழர் ஈழம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லிவிடத் துடிக்கிறேன்!

சொல்லத்துடிக்கும் என் உள்ளம் அந்தச்
சோகம் நினைவெனைக் கொல்லும்
மெல்ல முடியா உள் நோவும் – நெஞ்சு
விழுங்கவும் முடியாமல் கேவும்
அல்லல் மனதினுள் பீறும் உடல்
அன்றாடம் கடமைக்குள் மூழ்கும்
சொல்லி அழ மிக வெட்கம் உமக்கு
சொல்லா விடில் ஆறா துக்கம்

லண்டனில் வெளிச் சிறை வாசி இந்த
நாட்டுக்குள் மட்டும் நடமாட வாசி
கண்டறியா வெளிநாடு வேலை
களைப்பாலே வந்துடன் உறங்கிட வீடு
பெண்டு பிள்ளை ஒன்றாய்க் கூடி – மகிழ்ந்து
பேசி உலாவர நாள்வரா கூடி
புண்ணாய் உடல் மனம் ஆகி நாளும்
போய் வரும் வேலைக்கு போம்வரை ஆவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கும் எழுச்சி தாய் நாடு நிதம்
போரின் அழிவிலும் நின்மதி நாடு
எங்கனும் ஊர் உறவாளர் – எந்த
இடருக்கும் கைதர பலர் வருவார்கள்
அங்கேனும் திரும்பி நான் போக பயண
ஆவணம் இல்லையாம் விமானத்தில் ஏற
இங்கு ஏகும் முன் ஊரில் உயர்த்தி உரிமை
எவ்விடம் உண்மையில் இப்போ நான் அகதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் பூக்களும் காயப்படுத்தும்!

என் இனிய கண்மணியே என விழித்து உன்னை
இது வரை நாள் கடிதங்கள் தொடங்கி வந்த என்னை
உன் இதயப்பூ என்ற வெட்டரிவாள் குதறி
ஓடித்ததனால் எழுதுகிறேன் உள்ளம் மிக அலறி
என்ன என்று உனை விழிக்க ஏதொன்றும் அறியேன்
எனவே நான் ஆரம்ப அடை மொழிகள் குறியேன்
சின்ன மணி துளி நேரம் தனித்திருந்து வாசி
சேர்ந்து எந்தன் நினைவை இதை குப்பையிலே வீசு

எட் டாண்டு உன்னை கைப்பற்றி எங்கும் சுற்றி
இருந்தும் ஒன்றாய் கொழும்பில் நாம் காதல் மிக முற்றி
விட்டு இங்கே லண்டன் வர நான் பிரியும்போதும்
விலகும் உயிர் துயராலே என சொன்னாய் நீயும்
எப்படி நீ மறந்தாய் உன் இதயம் என்ன லொட்சா?
ஏஜென்சிக் காரனுக்கு நீ இப்போ சொத்தா?
விட்டெறிந்தேன் பத்து லட்சம் உனை அழைக்கப்பெற்றான்
விமான பயண வேளைக்குள் அவன் உனக்கு உற்றான்
கொஞ்சு மொழி டயானாவாம் குதிரைப் பண்ணை மகளை
கோமானார் சால்ஸ் மணந்து கொண்டதுவும் கவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சியர் கதை கோடி வாசல் தோறும் ரோஜா
வடிவழகு பறித்தெடுத்து அணிந்து கொள்வோர் ராஜா
நஞ்செதற்கு இறை படைத்தான் நங்கை யர்களாலே
நாளாந்தம் ஏமாறும் ஆண் குடிக்கத்தானே

முள்ளில்லா பூவாக கண்ட காதல் தாகம்
முள்ளல்ல பூவாலே கொண்ட தின்று காயம்
குள்ளமில்லா காவியுடை சந்திரா சாமியாரும்
கனகோடி ஊழல் போயஸ் பீரங்கியில் பேரம்
வெள்ளை நிறத் தோலில் கறுப்பு பாக்கிநிற துவேஷம்
வெற்றியின் பின் சந்திரிக்கா தமிழர் இன துவேஷம்
கொன்று எலியைப் பாய்ந்து தின்னும் பூனைகளின் வாயும்
குட்டிகளை கௌவும் போது அவை தாயாய் ஆகும்

எதை எழுதி என்ன இனி முடிந்த கதை தானே
ஏமாந்த துயர் போதும் இனி புலம்பல் வீணோ
வதையும் என் இதயம் போல் அவனையும் நீ மீண்டும்
வாட்டாதே ஏமாற்றும் கலை போகும் நீண்டும்
விதை விதைத்து வினை அறுத்தேன் காதலினை விதைத்து
வேளைக்கொரு காதலனை நீ பிடித்தாய் வளைத்து
எதைச் சொன்ன போதும் தமிழ்ப் பெண்கள் பலர் நல்லாள்
இதயத்தில் காதல் ஒன்றை தினம் துதிப்போர் உள்ளார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலம் பெயர் வாழ்வில் இளைய தலைமுறை

எங்கள் தாய் வழிவந்த தமிழேஎம் மொழியாம்
இது அல்ல முன்னவரின் ஈழம் தாய்நாடாம்
எங்கள்வாழ்வு இந்நாட்டில் தற்காலி கம்தான்
என்றோநாம் மீள்வதுண்மை ஈழநாட்டுக் கேதான்
தங்கள் கூட்டில் களவாய் குயில் முட்டை இட்டுப்போக
தாம் அறியா காகம் அடையை காக்கும் அவைக்கும்சேர
பொங்கும் கோபத் தோடுகுஞ்சு பொரித்து கூ கூ என்ன
போ போ என்று கொத்தும் காகம் குயில் குஞ்சு ஓட

இந்த நாட்டில் எங்கள் நிலையும் குயில்குஞ்சு போல
ஏற்றவழி எண்ணிநாங்கள் வாழ்வம் தமிழ ராக
வந்தநேரம் இந்தநாடு தந்த உதவி நன்று
வந்தநாங்கள் தொடர்ந்துதங்க கேடு ஆகும் பிந்த
எந்த மொழியில் இங்கேகல்வி நாங்கள் படிக்கும்போதும்
இந்த நாட்டுக்காரரோடு இருந்து படிக்கும்போதும்
செந்தமிழை மொழிப் பண்பை கலையை மறக்க லாமோ
சீனநாடு போனால் உணவில் பாம்பை ஏற்கலாமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப் பொடியள் போதை புகையில்
வேண்டாம் எமக்கு இவைகள்
உள்ள தெய்வம் மாதா பிதா
உணர்ந்து பணிவோம் அவரை
பிள்ளைகளாய் எம் வயதோர்
பிணமா கின்றார் போரில்
உள்ளம் உணர்ந்து செய்வோம் நாங்கள்
உதவி இயன்ற வரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தொடர...

புலத்தின் தமிழ் மொழி இனத்தின் முகவரி
போக்கிடம் ஏதெங்கும் என்று குறி
நிலத்துக்குள் வேருக்கு சாய நீர் பாய்ச்சினும்
நிறம்மாறா செடிகொடி உண்மை நெறி

நாடும் மொழியும் நம் இருகண் என்பர்
நாம் எங்கள் ஈழத்தின் மண் மக்களே
நீடுள் உலகத்தில் எத்திசை ஏகினும்
நிதம் இவை பரம்பரை குறியீடே?

முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும்
கொக்காகா என்பது முன்னோர் மொழி
எக்காலும் வாழ்விடம் எங்கெங்கு ஆகினும்
எங்கும் வந்தேறிகள் என்ற பழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் மூக்கு காதுவாய் கண்டம் மேல் யாதுமாய்
கடவுளே முகம் ஆக்கி படைத்துவிட்டான்
பண்பாடு மொழி கலைபதிவுகள் உதிவு மண்
படைப்பன்றே எமக்கென கொடுத்துவிட்டான்.

புலத்திலும் தமிழ் மொழி போற்றி எம் சந்ததி
பொழுதெலாம் பேசிட செய்வம் வழி
இனத்தின் முகவரி இது என பார் எங்கும்
எம்மை புரிந்திட செய்வம் விதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலரட்டும் புது நம்பிக்கை

கண்டதுமே கைவாகு கொடுக்கும் வர வேற்பு
கஷ்டத்தில் துணைபுரிதல் உணர்த்தும் மன நோக்கு
கொண்டதன் நம்பிக்கை கொடுக்கும் மனப் போக்கு
குறிக்கோளை வெல்லத் தரும் உள்ளத்து ஊக்கு
எண்டிசையும் இருள்சூழ இடரில் தவிப் போரை
எய்தவைக்கும் நம்பிக்கை எதிர்கால கீதை
இரண்டாயிரம் புத்தாண்டில் நம்பிக்கை உதயம்
நல்வகையில் புலர்விக்கும் புத்தூக்கம் இதயம்.

போருக்கும் பொருட்தடைக்கும் புது அரசில் மாற்றம்
புலம்பும் தாய் நாட்டுறவில் நம்பிக்கை ஏற்றம்
சீர் உழவுக்கு எரிபொருளை வட கிழக்கு கண்டு
சிரிக்கிறது விளக்கொளியில் மகிழ்வுதனைக் கொண்டு
பாருக்குள் ஆப்கான் போர் பாக் இந்தியா சீற்றம்
பனி போரைக் கண்டது போல் அமைதியுடன் மாற்றம்
வேருக்குள் நம்பிக்கை உரம் வார்த்துக் கொண்டு
விளைகின்ற புத்தாண்டில் வெற்றிகளும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலரும் நல் நம்பிக்கை பொழியும் புத் தாண்டே
பொழிவாயோ மகிழ்வுகளை இறுதிவர ஈண்டே
பெயரும் புல நாடெல்லாம் தமிழ் அழியும் சாயல்
பிள்ளை பெயர் பதிவினிலும் வெளிநாட்டு மையல்
துயரூடு நாடு மனை விட்டிங்கு வந்தோர்
தொலைந்த முகம் அழிந்த இனம் எனும்நிலை உற்றார்
உயிர்போகும் தறுவாயில் தமிழ்ஈழ ரோடு
உய்விக்க தருவாயோ தனி ஈழ நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாயிரத்தில் பூக்கட்டும் பூக்கள்!

காலைப் பூந்தென்றலிலே சிற்றலை இசையோடு
காதோரம் இணைந்துகவி தைபாடும் நேரம்
மாலையிலே சிறுவர்முற்றம் வெள்ளிமலர் வீசி
மகிழ்வோடு நல்லதோர் வீணைசெய்து பேசி
கோலஅறி வியலரங்கம் புதிர்வினா பெண் ணின்குரல்
கொடுக்கின்ற ஆனந்தம் புதியதோர் உலகம்
சீலம்மிகு தினம்பூத்த டி.ஆர்.டி பூக்கள்
சேர்கபுத் தாயிரத்தில் பூக்கின்ற பூக்கள்.

எண்திசையும் வாழும்நாம் டி.ஆர்.டி நேயர்
இதயத்து உறவால்ஓர் குடும்பத்தார் ஆனோர்
கண்டறியோம் ஆனாலும் என்றென்றும் எம்மை
காதுவழி இணைத்துவைக்கும் டி.ஆர்.டி நன்மை
பண்ஒலிர செய்திபெற எங்கள் குரல் ஒலிர
பாவமென திகழ்அறிவிப் பாளர்உளம் குளிர
கொண்டியக்கும் வல்லாளர் குகநாதன் குழுவாம்
கொள்க சுக நலன்களை இறையடியைத் தொழுவோம்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்

எண்ண இனிமை எம் இதயத்தில் ஏற்றுமே
எங்களின் ஈழமண் யாழ்ப்பாணம்
சுண்ணக்கல் மண்ணுக்குள் பனங்கள்ளுப்பானத்தை
சுவைக்கத் தரும் எங்கள் யாழ்ப்பாணம்.

இலங்கையாம் தீவுக்கு தலைப்பாகை போலநின்(று)
இலங்கிடும் பனங்கூடல் யாழ்ப்பாணம்
உலகப்படத்திலே யாபேரின் கவனத்தை
உறுத்தும் போர் வீரரின் யாழ்ப்பாணம்.

சங்கிலி மன்னன் பின் எல்லாளன் இராவணன்
தமிழனே ஆண்டமண் யாழ்ப்பாணம்
சிங்கள நாட்டோடு அந்நிய ஆட்சியர்
சேர்க்க கலந்த மண் யாழ்ப்பாணம்

ஆழக் கிணற்றில் வெடிவைத்து கல்எல்லாம்
அகற்றி கிணற்று நீர் அதைத் தோண்டி
வாழ்த் துலாக் கொடி பட்டையால் நீர் அள்ளி
வளர்த்து பயிர் செய்த யாழ்ப்பாணம்.

மாசார் பனை தொட்டு இயக்கச்சி ஈறாக
மணல் தரை தென்னைகள் நிரைக்கு நிரை
வேறான சப்த தீவுகள் கீழ்க்கரை
வேலணை முதல் நெடுந்தீவு வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீநோரால் மீன்வளம் மயிலிட்டி பருத்துறை
திசை எல்லாம் கடற்கரை கருவாடு
மானாவாரி தோறும் நெல்லாய் விளைகின்ற
மண் கொண்ட கிளிநொச்சி புறநகரம்.

சீமெந்து தொழிலகம் வேளைக்கோர் சங்கொலி
திசை எல்லாம் நெசவு கை, மின்தறிகள்
ஆம் அந்த பரந்தன் இரசாயன சாலையில்
அன்றாடம் காற்றில் மருந்து நெடி.

உப்பளம் கொண்ட ஆனையிறவெங்கள்
ஊர்தோறும் வெற்றிலை சாமிதினை
மிக்க வளம் தரும் காய்கறி வெங்காயம்
மா, பலா, வாழை முந்திரிகை.

இருக்கின்ற வளவெல்லாம் பனைதென்னை குலைதள்ளும்
இல்லங்கள் தலை வாசல் குளிர் ஊட்டும்
பழக்கம் இல்லாதார்க்கும் உபகாரம் செய்கின்ற
பண்பெங்கள் மண்ணில் இயல்பாகும்.

நீர்வேலி வாழை பன்னாலை வெற்றிலை
நீரைக்கெங்கும் உரும்பிராய் முந்திரிகை
வாய்ஊறும் கூவில்கள் கருப்பனீர்பனங்குட்டான்
வாங்கலாம் ஊர்வடி சாராயங்கள்.

கீரிமலைக்கேணி கஜானா கடற்கரை
உயனை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி
பார்க் என்று காதலர் பக்கம் ஒளிந்திட
பாங்கான சுப்பிர மணியம் பூங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி மாவை கீரிமலை நல்லூர்
சடுதியில் பிரபலம் துர்க்கையம்மன்
தன்னகம் மரியாளின் தலம் கொண்ட பாஷையூர்
தக்க யாழ் முஸ்லிம் பள்ளி வாசல்.

உத்தியோகத்துறை உயர்விலே தமிழனை
உயர்த்திய பல பள்ளி கொண்ட நிலம்
மத்திய கல்லூரி, இந்து, ஹாட்லி
மகாஜனா, சென்ஜோன்ஸ், ஸ்கந்தா, யூனியன்.

வித்தைகொள் வேம்படி, சென்கென்றீஸ், வயாவிளான்
விக்டோரியா, ஹிபேக், சோமஸ்கந்தா,
ஜெவ்னா, சிதம்பரா, மானிப்பாய், நடேஸ்வரர்
இராமநாதன், உடுவில், மெதடிஸ்ற், பல.

சுற்றங்கள் சொந்தங்கள் சூழலாய்தாம் வாசம்
சொற்கேட்டு நடக்கின்ற பணிவு பாசம்
மற்றவன் நாய்கூட வால் ஆட்டிக் கண்டதும்
மதிக்கின்ற பண்பெங்கள் ஊரின் வாசம்.

மது புகை மாதெல்லாம் வேலி மறைப்புக்குள்
மரியாதை குரு பெற்றோர் மூத்தோர்க்கெல்லாம்
எது எவன் எப்படி விடுப்புக் கதைத்தாலும்
இடர் சொந்தத்துக் கென்றிட்டால் துடிக்கும் சதை.

தண்ணீர் நெருப்பு விறகு காற்றுக்கு
தாகாசு என்றெம் மண் கேட்டதுண்டோ?
விண்ணாணம் வெள்ளையன் நாடெல்லாம் இவற்றுக்கு
பில்வரும் வீட்டுக்கு மாதாமாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி வெறியிலே செம்பு தண்ணி என்ற
சடங்கு திமிர் கொண்ட யாழ்ப்பாணம்
மீறும் காதலர் இரா இராவாய் தாம் ஓடும்
விடுப்புகள் காணும் எம் யாழ்ப்பாணம்.

சீதனம் வேலி கதியாலால் எல்லைப் போர்
சீறும் வாய்க்கால்வழி தண்ணிச் சண்டை
ஆதனம் விட்டோடி அகதியாய் ஊர் ஊராய்
அல்லல்பட்டு அலையும் எம் யாழ்ப்பாணம்.

தீவான் நாட்டான் என்ற பிரதேச வாதங்கள்
திகழ்ந்தாலும் உரிமைப் போர் ஒன்றுக் கென்றே
ஆதி அந்நாள் முதல் தமிழரசு புலி என்று
ஆதரிக்கும் எங்கள் யாழ்ப்பாணம்.

சந்தைக்குள் கீரைக்கும் பேரம் பேசி விலை
சாமான்கள் வாங்கும் வழக்கம் உண்டு
விந்தை திருமணம் திருவிழா வேடிக்கை
விரயமாம் பணம் ஓர் இரவில் கண்டு.

கந்தஷஷ்டி வந்தால் மச்ச சட்டி எல்லாம்
கவிழ்த்து கோடிக்குள்ளே வைப்ப துண்டு
அந்த விரத மறுநாளே பிளாவில்கள்
பங்கு கிடாய் இறைச்சி சுவைப்பம் உண்டு.

கன்னர்கிடாய் வேள்வி கவுணாவத்தைவரும்
கழுத்துக்கு மாலை அணிகலன்கள்
சின்னக் குடிசைக் கைத்தொழில் புகையிலை
சேர்த்து சுருட்டு சுற்றும் தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாமார் கோயிலில் பூங்காவனம் ஏழில்
அளவெட்டி பிள்ளையார் வாணவெடி
திண்ணை மதவெல்லாம் வம்பளப்பு சுழட்டி
தெருவில் திரிய ஓர் இன்பக் குஷி

தேர்தீர்த்தம் சப்புறம் வேட்டைத்திருவிழா
திக்கெங்கும் வீதிகள் கடலைக்காரர்
பாயை விரித்து கடலைப்பையோ(டு) உட்கார்ந்து
பனங்குட்டான் கடித்துண்ணல் உல்லாசம்.

பழஞ்சோற்று பானை நீர் ஊறுகாய் தயிர் சேர்த்து
பதமாக்கி பழந்தண்ணி தான் ஆக்கி
மிளகாய் வெங்காயமும் மர வெள்ளிக்கறி ருசி
மேவச் சுவைத்துண்ணும் யாழ்ப்பாணம்.

மொட்டைக் கறுப்பனில் சோறு அரிசிமா
பச்சைப் பெருமாளில் கீரைப்பிட்டு
கொச்சிக்காய் உப்புப்புளி உரலிலே இட்(டு)ப்பின்
குத்தவரும் சம்பல் பச்சடியும்.

கட்டித்தயிரையும் விட்டுக் குழைத்து ஊர்
கத்தரிக் காய்குழம் போடு விட்டு
வெட்டு வெட்ட வயிறு முட்டி திருப்தியில்
விடுகின்ற ஏவறைக் ஏது நிகர்?

பூவரசம் இலை கோலி பழஞ்சோற்றை வாய்கௌவ
பொரித்த கருவாட்டில் ஓர் கடி கடித்து
மேவ வருஞ்சுவைக்கு மக்டொனால், கெண்டக்கி
மேலாமோ அம்மம்மா குழைத்துத் தர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரக்கனில் பிட்டு கொழுக்கட்டை ஒடியலில்
கொண்ட பிளாட்டிலே பனங்காரம்
அரைத்து கூட்டிட்ட கட்டை மீன் குழம்பென்ன
அவித்து துவைத்த பனங்கிழங்கு.

கொத்து றொட்டிக்கு அலியா ஹட்டேல் சுவை
பிட்டுக்கு ரவுன் பக்கம் மொக்கன் கடை
மெத்த சுவை தரும் மலாயன் கபே வடை
மேலான பருத்திதுறை தட்டுவடை.

உண்ணச் சுவைக்கும் வாய் ஊறும் நினைக்கையில்
உலகில் இச்சுவை நாங்கள் எங்கு கண்டோம்
மண்ணில் சிறந்தது யாழ்ப்பாண மாம்பழம்
மறக்குமா ஒடியற்கூழ் சுவையை உள்ளம்.

இலுப்பை அண்ணமுண்ணா விளாத்தி நாவல்
இருக்கும் ஜம்பு கொய்யா மாதுளைகள்
பழுக்க புகை ஊதி சந்தைக்கு கொண்டோட
பணம் தரும் பல வகை வாழை இனம்

ஆடுமாடு கோழி வருமானம்
அன்றாடம் இலைக்கறி சொதிசேரும்
வீடு பசளி பொன்னாங் காணி பப்பாளி
விருந்தென்றால் சமைவதும் வீட்டுக்கோழி

கொளுத்தும் வெயிலில் வடிகின்ற வியர்வையில் நிழல்
கொடுக்கும் வேப்ப மரத்தடியில்
படுத்துப் பாயில் ஒரு கண் உறங்கினால்
பஞ்சி ஒரு பொழுதிலே பறக்கும் அல்லோ?

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான கிளி நொச்சி மாதே!

என் இனிய கிளிநொச்சி மண்ணே!
என்றென்றும் நீ எனக்கு பொன்னே!
துன்பியலில் போர் நிலையில்
சூழல் எல்லாம் காட டர்ந்து
நின் அழகை ஷெல் பொம்பர் சிதைக்க
என் துயரம் நின்நினைவு வதைக்க.

கரைச்சி பளைபூ நகிரி பகுதி
கணக்கில் உந்தன் கிளிநொச்சி தொகுதி
விஸ்வமடு முழங்காலில்
விஸ்தாரம் ஒரு குறுக்கு
நிரை தொடங்கி எழுதுமட்டு வாளில்
நிற்கும் எல்லை முறுகண்டி யூரில்

அறுநூற்று முப்பத்தி ஆறு
அகல சதுர மைல் உனது பேறு
பெரும்பரப்பு சுற்றளவை
பெற்ற உந்தன் மருதநிலம்
சொரிகின்ற சோற்று வளத்தாலே
சோராது யாழ்மண் பசியாலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளில் பல்லவனார் கட்டு
பேர்பூன கிரிஇரணைத் தீவு
பட்டினமாம் கிளி நொச்சி
பகுதியை சூழ் கரைச்சியுடன்
முள்ளிப்பற்று புலோற்பளை முகமாலை
முழுவதும் உன் பிரதேச சேர்வை.

இரணைமடு வன்னேரி முறிப்பு
என நவநல் குளங்கள் உந்தன் இருப்பு
கல்மடுநல் பூநகிரி
ஸ்கந்தபுரம் முழங்காவில்
நீள்வாய்க்கால் வழி கையை நீட்டி
நீர் இறைத்தாய் பயிர்க்கு பயன் காட்டி.

நுளம்பு பாம்பு மலேரியா நோய் நொடியில்
நுங்கியும்தாம் உந்தனது மடியில்
காடழித்து கழனி வைத்து
கட்டிடங்கள் தாம் அமைத்து
ஆண்டு நாற்பதளவில் வந்து கூடி – உனை
அழகாக்க உழைத்தவர்கள் வாழி

படித்தோர்க்கு உபபயிர்செய் காணி
பரிந்துரைந்த அரசு திட்டம் பேணி
வாலிபர்கள் வந்தடைய
வாழைக்குலை மிளகாய்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனி புதனில் கிளி நொச்சி சந்தை
சனம் தெற்கில் இருந்தும் வரும் விந்தை.

இந்து முஸ்லிம் கத்தோலிக்கம் வேதம்
எல்லா மதமும் உனக்குள் இல்லை பேதம்
சைவமத பெரும் தலங்கள்
சகல ஊரும் வரும் தினங்கள்
கொடியேற்றம் தேர்தீர்த்தம் பொங்கல்
கோலம்மிகும் வெவ்வேறு திங்கள்

ஆதரவு குறைந்தோர்க்காய் இல்லம்
அமைத்து சிறார் காத்ததும் உன் உள்ளம்
காந்திசேவா குருகுலம் நல்
கஸ்தூரி பாய் இல்லம்
நவஜீவன் லோங்ஸ் கருணா நிலையம்
நல்கும் அன்பில் தான் சிலையும் உருகும்.

மாவட்டம் கிளிநொச்சி ஆகி
மாணவர்பல் கலைக்கழகம் ஏகி
கல்விபொருள் தொழில் வளத்தில்
கடுகதியில் வளர்ந்தாயே
சிங்களர்தாம் தொடுத்த இன யுத்தம்
சீரழிக்க இழந்தனையா சொத்தும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் இலங்கை மலையகத்தில் வாழ்ந்தோர்
தேடிவந்தார் கலவரத்தால் பெயர்ந்தோர்
அண்டிவந்த பேர்க்கெல்லாம்
அடைக்கலமே உன் இல்லம்
இன்றெங்கள் யாழ்ப்பாணம் ஆமி
இன்னலினால் நகர்ந்ததும் உன்பூமி.

கொட்டியநெற் கதிர்பொறுக்கி வாழ்வை
கொண்டோட வைத்தாய்நீ ஏழை
பட்டனைய நின்அழகு
கெட்டதுவோ போராலே
விட்டுவிடு வேதனை எம் நாடு
விடுதலையாம் பின் உனக்கார் ஈடு?

என் இனிய கிளிநொச்சி மாதே!
என்றென்றும் நீ எனக்கு தாயே!
எண் கலைகள் திறன் புகழ்கள்
இல்லவள் என் சகதத் துகள்கள்
உன்கொடைகள் வளமண்சேர்மாதே!
உன் மடியில் இறை தரட்டும் சாவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை நாற்றுக்கள்

நம்பிக்கை நாற்றுக்கள் ஈழம் நாளை
நனவாக்கி தருவார்கள் இளவர்படை வேழம்
நம்பிக்கு போற்றுதல்கள் பாரில் – சீறி
தளராமல் வெற்றிகளை குவிக்கின்றார் போநில்.
கம்பனது காலம் முதல் யுத்தம் இலங்கை
கண்டுளது இறுதி வெற்றி நீதிக்கே நித்தம்
வெப்பி அழும் தமிழர் கண்ணீர் வாழ்வு – வாளாய்
வேர் அறுக்கும் ஊர் அனைத்தும் எதிரி இனிவீழ்வு.

வளமான கிளிநொச்சி மாதா – கையில்
வந்தே கியது ஆனை இறவு இப்போதா
குளம்தோறும் நீர் ஊர்கள் தோறும் – வாய்க்கால்
கொண்டோடும் கிளிநொச்சி நிதம் பசுமை காணும்
உளம் குளிரும் அந்நிலத்தில் உருண்டு – மண்ணை
ஒத்தி ஒரு முத்தமிட நெற்சொரியும் திரண்டு
அளவான காற்று மழை வெயில் – நாற்று
அறுவடையாம் வரை தொடரும் நம்பிக்கை உய்வில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னை பனை கிழங்கு தேங்காய் சொரியும்
தேங்குவள மணல் இயக்கச்சி, பனைவளங்கள்பொலியும்
வன்னியனாம் பண்டாரன் வீரம் – வளிதை
வன்னிநாச்சி வெள்ளையனை எதிர்கொண்ட தீரம்
பொன்னாய் ஆஇனம் பாலைச் சொரியும்
பூநகிரி பல்லவமன் ஆண்ட நிலம் அறியும்
முன்னர் முதல் வளம் வீரம் மீதம் – ஈழம்
முழுமைக்கும் வன்னிதரும் உணவுநிதம் ஏதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையுடன் எழுதிய கடிதம்

லண்டனில் குடும்பத்துடன் வசிக்கும் ஒரு மருமகன் கிளிநொச்சியில் இருக்கும் அன்புக்குரிய தன் மாமியார் அதிக சுகயீனம் உற்றுள்ளார் என்று வந்த செய்தியை அறிந்து கவலையுடன் எழுதிய ஒரு கவிதைக் கடிதம்.......

படுக்கையிலே விழுந்தாலாம் மாமி
பதைக்கிறதே நெஞ்சம் என்ன சேதி?
மிடுக்கான கட்டுடலை மீறி
மேனியிலே புகுந்ததுவோ நோயும்.

விடியும் முன்பு எழும்புவவே நித்தம்
வீடதிரும் அதிகாரச் சத்தம்
கடுகதியில் மலர் வீட்டுப்பக்கம்
கால் நடக்கும் முற்றம் உடன் சுத்தம்.

கால் ஆறும் வீடிழந்த துக்கம்
கால்வாரப் படுக்கை அதா நித்தம்
பால்மாடு கோழிஎன்ற சொத்தும்
பாழானதாலா நோய் மொத்தம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவை இழந்து அன்று நின்றேன்
அம்மாபோல் மாமி அன்பு மென்றேன்
எம்மா இல் வளம்சோலை வாழ்வை
என் மாமி பராமரிப்பில் கண்டேன்.

சுற்றிக் கட்டும் தாவணியின் முடிச்சில்
சுருண்டிருக்கும் பண நோட்டு மடிப்பில்
பற்று மிகு மலர் பிரிவின் தவிப்பில்
படுக்கை உமை அணைந்ததுவோ விரிப்பில்

வெற்றிலையும் பாக்கோடும் வாறோம்
வாறவரை சுகப்படுங்கோ தேறி
பற்றுமிகு மருமகன் சொல்மீறி
பறக்காமல் இருங்கோ என் மாமி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தொடரும் மிடுக்கு

இனம் தெரியா சோர்வு, களை இழந்த கோலம்
இல்லம் எங்கும் ரி.ஆர்.ரி. இல்லாக் காலம்
கனத்த துயர் ஏக்கம் எம்மோடு என்றும் பேசி
கண் எதிரே இல்லத்தில் இருந்த வாசி
இனத்தவராய் குடும்பத்தில் ஒன்றிப் போனோர்
எம் இனிய ரி.ஆர்.ரி. குழுவி னோர்கள்
தினம் அன்று புதன் காலை தொடர்பில் அற்றார்
திகைப்பு ஏக்கம் நேயர் நாம் துயரில் உற்றோம்.

மின்ன லென இடிஎன்ன வந்த துன்பம்
மிகையாக தாக்கியது எவர்க்கும் எங்கும்
மன்னவனின் பிரம்படியை சிவனார் பெற்ற
மறுகணமே உலகமக்கள் நோவு உற்றார்
இன்னலது ரி.ஆர்.ரி. கொண்ட தென்றால்
எம்குடும்பம் கொண்ட தென்ற உணர்வே அன்றோ
இன்னமுத ஒளி ஒலியை மீண்டும்கண்டே
இல்லம் உள்ளம் ஆறியது மகிழ்வு கொண்டே

பத்தில் வந்த வியாழன் நம்மை பதியை விட்டு
பறக்கவைக்க வந்ததுவோ விதியை இட்டு
வித்தை திறன் மீதூர உலகம் எங்கும்
வியாபகமாய் துவங்கிய நற்புகழால் உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்திறமை கண்ணூறு பட்ட தாமோ
நயவஞ்சகர் சூழ்ச்சி உமக்கு உற்றதாமோ
எத்துயரம் வரினும்பல கோடி நேயர்
இருக்கின்றார் கை கொடுக்க கவலை ஆறும்.

மீண்ட புது மிடுக்கோடு பொலிவு கண்டே
மிளிர்கிறது ரி.ஆர்.ரி. வலிவு கொண்டே
மாண்டீர்நீர் என்று தம்மை மயிலாய் எண்ணி
மகிழ்ந்தார்கள் வான்கோழி கேலி பண்ணி
ஆண்டவனும் அன்பு திறன்சேவைப் பக்கம்
அதை அறியார்தாம் கொண்டார்விரைவில் துக்கம்
பாண்டவரும் இராமனும் தான்பட்டார் துன்பம்
பாதை எங்கும் இனிவெளிச்சம் விடுக துன்பம்.

குரல் வளமும் கலைத்திறனும் பலநல் ஆக்கம்
கொண்ட கலைப்படை அல்லோ உமக்குள் தேக்கம்
தரம் மிகுந்த செய்தி! கலை நுட்பம் ஊற
தருகின்ற விளம்பரமும் சுவைக்கும் கூற
பெருமாடி மண்டபமும் மெருகும் சேர்வு
பின் என்ன? ரி.ஆர்.ரி.க்கு ஏது சோர்வு?
உரமான நேயர் என உள்ளோர் கோடி
உலக வலம் இனி தொடர்வோம் ஆடிப்பாடி.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரையே அக்கிரமம் போக்கு!

திக்கெல்லாம்போர் இயற்கை சீற்றம் தாக்கம்
தெருவெல்லாம் வறுமைப்பிணி துயரின் மூட்டம்
அக்கிரமம் அரசோச்சி நிலைக்கும் காலம்
அறம் நீதி நேர்மை பண்பு அழிந்த கோலம்
கொக்கரிக்கும் உன்மத்தம் முதன்மை ஸ்தானம்
கொண்டிலங்கும் தன்மை இன்று உலகுக்கீனம்
விக்கிரம புத்தாண்டே இவற்றை நீக்கி
விடுவாயோ அக்கிரமம் அனைத்தும் போக்கி.

தாய் தந்தை சகோதரங்கள் சொந்தம் சுற்றம்
தடுக்கி விழும் எங்கும் அறிமுகங்கள் கிட்டும்
நோய்துன்பம் பாயிலென்றால் பரிவாய்ப் பேண
நொடிக்கொருவர் என்றினி அவ்வாழ்வைக் காண?
போய் அகன்ற நிம்மதிகள் மாற்றார் நாட்டில்
புகலம்புகிறோம் அடையாளம் அழிவுக் கோட்டில்
பாய்ந் தோடி பணம்தேடும் வாழ்வே நாளும்
பழைய நிலை தாயக வாழ்வு என்று மீளும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரையும் கெட்டுமனம் தவிக்கும் வாழ்வு
நிராகரித்த அகதிமனு மதியார் சூழல்
பொத்தி அடை காத்துவந்த குயிலின் முட்டை
பொரித்த பின்பு காகம் தன் கூட்டை விட்டு
கொத்தி உடன் கலைக்கும் கத்தும் சத்தம் வேறு
கொள்வர் எவர் நிறம் மொழி நாம் மாற்றார் கூறு
சித்திரையே புத்தாண்டே பிறக்கும் நீயே
செப்பிடு என் துயரநிலை தாய்நாட்டில் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம் எரிந்தது! ஈழம் பிறந்தது

அறிவென்ற அருள் ஊற்றை பொழிந்த கல்வித் தேவி!
அமைந்திருந்தாள் யாழ்நகரில் அறிவு மழை வாரி.
செறிவாக சனம் திரளும் யாழ் நகர மத்தி,
செழிப்பான பூங்காவும் ஸ்ரேடியமும் சுற்றி.

தாகமுடன் அறிவாளர் தேடலுக்கு வருவார்,
தக்க பயன் விளக்கங்கள் நூல் படித்து பெறுவார்.
வேகமுடன் தமிழர் திறன் விளங்க வைத்த வித்து,
விரிந்திருந்த அரியபல நூல்கள் அதன் சொத்து.

காமினியாம் பேர்மானி காடையர் கூட்டம்,
கயமை, இன வெறியாட்டம் எரிந்த அந்த சொத்தும்
சாமியையே ஆமி சுட்டு பாவம் செய்த பூமி
சண்டை தினம் அன்று முதல் அவலம் பலி ஆவி.

நீறான சாம்பலிலே நெஞ்சுரத்தை பெற்றார்,
நீத்தார்கள் வீடுறவு இளைஞர் புறப்பட்டார்
ஆறாத இரத்தம் பலி அன்று முதல் யுத்தம்,
அதிகெதியில் பிரியவிடும் தமிழ் ஈழம் யுத்தம்.

⁂

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகையாம் சஞ்சிகையின் டொமினிக் ஜீவா

(வானொலியில் மல்லிகை ஆசிரியர் செல்வி பற்றி...)

நேற்றிரவு வானொலியில் நடந்த செல்வி
நின்ற தது செவிவழி என் உள்ளம் கௌவி
ஆற்றல்மிகு நின் திறனே தொடர்ந்து நாளும்
அல்லல் இடை மல்லிகையை கொணரும் சூழும்
போற்றரிய நின்பணியே திறன் வல்லாளா
போராட்டம் நிதம் இன்றும் புரியும் தோழா
கூற்றுவனும் எதிர் கொள்ள அச்சம் இன்றும்
கொண்ட கடும் உழைப்பாலே இளமை மின்னும்.

சாதிவெறி மல்லிகையை சரிக்கப் பார்த்தும்
சாயம் ஒன்று சிவப் பதற்கு பூசிச் சேர்த்தும்
ஓய வில்லை மல்லிகையின் வாசம் என்றும்
உதிரவில்லை போர்ச்சூழல் சேர நின்றும்
வேதம் அது முற்போக்கு சமச்சீர் நோக்கு
விதைப்பில் எழும் முளைகளது படைப்புக்கு ஊக்கு
ஆதலினால் மல்லிகையின் பந்தல் கால்கள்
அன்றாடம் நிறுத்திவைக்க பலநல் லார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபத்தி நாலில் இன்றும் இளமை கொஞ்சும்
எழிலானா நின் குரலில் இல்லை வஞ்சம்
தளதளப்பு அத்தியடி நேயர் அன்பை
தான்கண்ட ஆனந்த களிப்பில் நெஞ்சில்
மழுங்காத பேனாவில் ஆற்றல் ஈது
மறையாது புகழ் அதற்கு என் றெப்போதும்
தொழுகின்றேன் இறைபாதம் ஆற்றல் ஆயுள்
தொடரட்டும் துடங்காது என்றும் நோயில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிழல் தேடும் தமிழன்!

(கவிதைகள்)

ப.வை. ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org